# எதிரொலி

ஆஸ்திரேலியா

ETHIROLI

குரல் 08 அதிர்வு 94 சித்திரை 2025 editor@ethiroli.com தொ.பே:1800 960 162






## தேர்தல் சூழ் கங்காரு தேசம்




ஆஸ்திரேலியாவிலிருந்து வெளிவரும் தமிழ் மாத இதழ்


ROYAL
INTERNATIONAL
MONEY TRANSFERS
EASY • FAST • SAFETY
நாணயமிக்க பணப்பரிமாற்றம்
'டன்டினொங்' இல்
புதியதோர் சேவை
BOC
PEOPLE'S BANK
COMMERCIAL BANK
HNB
සම්පත් බැංකුව
சம்பத் வங்கி
Sampath Bank
UNION BANK
Amãna Bank
It's Your Bank
Same day bank transfer
No One Beat Our Rate
THE HUB ARCADE
4/131-147, Walker Street, Dandenong VIC 3175
(03) 87649143
0406409403
royalinfomoney@gmail.com


KUMARAN'S
Cafe
Enjoy the
South Indian
Favourites
IDLI | DOSA | VADA | BAJJI
A Complete Vegetarian Restaurant
Call Us For Orders
0413 306 575
RIVERDALE VILLAGE PLUS SHOPPING CENTRE
200, HUMMINGBIRD BOULEVARD, TARNEIT, VIC - 3029.


SAME DAY DELIVERY SERVICE க்கு
தங்களின் அமோக வரவேற்புக்கு
எங்களின் அன்பு நன்றிகள்
SRI KUMARAN
our local store
Whatsapp us 0421 255 557
We have now expanded our services to
CBD | POINT COOK | MANOR LAKES | WERRIBEE | TARNEIT
உங்களின் ஆதரவு! எங்களின் உத்வேகம்!!
OUR STORES
SHEPPARTON | TARNEIT | CLYDE NORTH | NARRE WARREN | CARRUM DOWNS
info@srikumaran.com.au
www.srikumaran.com.au








# சத்சரா நிமேஷ் சித்திரவதை கொன்ற இறுதி இளைஞன்

● ரமேஷ்

அது கொழும்பின் வெலிக்கட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாவல எனும் பகுதி. ஏப்ரல் முதலாம் திகதி இரவு ஏழு மணியளவில் 119 என்கிற வெலிக்கட பொலிஸ் நிலையத்தின் அவசர ஆபத்துப் பிரிவுக்கு அழைப்பொன்று வந்ததுள்ளது. அழைப்பின் மறுமுனையில் பேசியவர் தமது வீட்டுக்குள் இனந்தெரியாத நபர் ஒருவர் நுழைந்து கலவரத்தில் ஈடுபடுவதாகவும், அவரை உடனடியாகவே விரைந்து கைதுசெய்யுமாறும் முறைப்பாடளித்திருக்கிறார்.

இந்த முறைப்பாட்டையடுத்து சம்பவ இடத்துக்கு விரைந்த வெலிக்கட பொலிஸார், இளைஞர் ஒருவரை சம்பவ இடத்திலிருந்து கைதுசெய்துள்ளனர். அவரின் பெயர் முத்துவடிகே சத்சரா நிமேஷ் (வயது- 26). பதுளை மாவட்டத்தைச் சேர்ந்தவர். மருத்துவத் தாதியராவதற்கான பயிற்சிநெறியை கொழும்பின் பிரபல தனியார் மருத்துவமனையில் தொடர்ந்து கொண்டிருப்பவர். சத்சரா நிமேஷின் சமூக வலைத்தளங்களை பரிசோதிக்கும் போது அவர் மொடலிங் துறையிலும் ஆர்வமுள்ளவர் எனத் தெரிகிறது.

நிமேஸ் கைதுசெய்யப்பட்ட விடயமானது அவரது உறவினர்களுக்கோ அல்லது நண்பர்களுக்கோ அறிவிக்கப்படவில்லை. இரவு எட்டு மணியாகியும் தொடர்பேதுமிருந்த நிமேஷை அவரது நெருங்கிய நண்பர் தொலைபேசி ஊடாகத் தேடியிருக்கிறார். முதல் அழைப்புக்குப் பதில் கிடைக்காத போதிலும் இரண்டாம் அழைப்புக்குப் பதிலளித்திருக்கிறார் நிமேஷ். ஆயினும் அவரது அழைப்பை ஏற்றுக்கொண்ட நிமேஷ் எவ்விதமான உரையாடலையும் அவருடன் மேற்கொள்ளவில்லை. "நான் திருடனல்ல" என்கிற வார்த்தையை நிமேஷ் மீளமீள யாருக்கோ சொல்லிக்கொண்டிருப்பது நண்பருக்குத் தொலைபேசி அழைப்பின் ஊடாக கேட்டிருக்கின்றது. அத்தோடு அந்த அழைப்பின் பின்னணியில் கேட்ட சத்தங்கள் அதுவொரு பொலிஸ் நிலையம் என்பதை உணர்த்தியிருக்கின்றது. எனவே தனது நண்பரான நிமேஷ் எங்கேயோ பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டிருக்கிறார் என்பதை அழைப்பெடுத்தவர் உணர்ந்துகொண்டார்.

இவ்வாறு நிமேஷ் பொலிஸ் நிலையமொன்றில் தடுத்துவைக்கப்பட்டிருக்கிறார் என்கிற தகவலை அவர் உடனடியாகவே நிமேஷின் தாயாருக்கு அழைப்பெடுத்து அறிவித்திருக்கிறார். நிமேஷின் தாயார் தனக்கு கொழும்பில் இருக்கின்ற அனைத்துப் பொலிஸ் நிலையங்களுக்கும் அழைப்பெடுத்துத் தனது மகனின் பெயரைக் குறிப்பிட்டு, அவரைக் கைதுசெய்துள்ளீர்களா என விசாரித்துள்ளார். அனைத்துப் பொலிஸ் நிலையங்களும் மறுத்துவிடவே, இறுதியாக வெலிக்கட பொலிஸ் நிலையத்திலிருந்து "ஆம், கைதுசெய்துள்ளோம்" எனத் தகவலளிக்கப்பட்டுள்ளது.

நிமேஷின் தாயார் மறுநாட் காலை வெலிக்கடை பொலிஸ் நிலையத்திற்குப் பயணமாகியிருக்கின்றார். அங்கே அவரின் மகனைக் காணவில்லை. அவரின் உடமைகள் சிலவற்றைத் தாயாரிடம் கையளித்த பொலிஸார், கைதுசெய்யப்பட்ட அவரின் மகனுக்கு மனநிலை பாதிக்கப்பட்டுள்ளதெனவும், அவரை மனநல மருத்துவரிடம் மருத்துவப் பரிசோதனைக்காக அனுப்பியுள்ளதாகவும் கூறியுள்ளனர். அவ்விடத்தில் பொலிஸாரினால் கையளிக்கப்பட்ட உடமைகளில் நிமேஷ் அணிந்திருந்த ஜீன்ஸ் இருக்கவில்லை. அதனை அங்கிருந்த குப்பைத் தொட்டியொன்றிலிருந்து தான் சேகரித்துக்கொண்டதாகவும், அதனோடு சில உரோமங்களும் காணப்பட்டதாகவும் நிமேஷின் தாயார் கூறியுள்ளார்.

இரவு எட்டு மணியளவில் மருத்துவமனைக்கு கொண்டுவரப்பட்ட நிமேஷின் நெஞ்சறையில் மட்டுமே வெப்பம் இருந்தாக அவரைப் பரிசோதித்த மருத்துவர் கூறியுள்ளார். எனவே நிமேஷ் மருத்துவமனைக்கு கொண்டுசெல்லப்படும்போதே இறந்துவிட்டார் எனவும், அவ்வாறு அவர் இறப்பதற்கு வெலிக்கட சிறைச்சாலையில் பொலிஸார் அவருக்கு மேற்கொண்ட சித்திரவதைகளே காரணம் எனவும் அவரின் குடும்பத்தினர் சந்தேகிக்கின்றனர். இந்தச் சந்தேகம் உள்ளடங்கிய செய்திகள் ஊடகங்களில் வெளிவரவே தெற்கை மையப்படுத்தி இயங்குகின்ற மனிதவுரிமைகள் காப்பாளர்கள், சித்திரவதைக்கு எதிராகக் குரல் கொடுப்பவர்கள் போராட்டங்களை நடத்தினர். இதன் விளைவாக பொலிஸ் ஊடகப் பிரிவு நிமேஷின் மரணம் குறித்து அவசர அறிக்கையொன்றினை வெளியிட்டிருந்தது.

அந்த அறிக்கையில், நிமேஷ் நாவல பகுதியில் வைத்து கைதுசெய்யப்பட்டதாகவும், அவரைப் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துவந்தபோது, மனநிலை பாதிக்கப்பட்டவரைப் போல செயற்பட்டார் என்றும் கூறப்பட்டுள்ளது. தனது கை, கால், தலை போன்ற உடற்பாகங்களை அங்குள்ள சுவர்களில் தேய்த்து, மோதி காயப்படுத்திக்கொண்டார் எனவும் அதனையடுத்து முல்லேரியாவிலுள்ள மனநிலை பாதிக்கப்பட்டவர்களுக்கான மருத்துவமனையில் அவரை சேர்க்க நடவடிக்கை எடுத்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டிருந்த போது சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்கிற சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ள நிமேஷின் மரணம் தெற்கில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருக்கிறது. இதனால் தற்போது நிமேஷின் புதைகுழி பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளது. இவ்விடத்தில் வெலிக்கட பொலிஸ் நிலையத்தில் பொலிஸ் சித்திரவதைகள் இடம்பெறுவதே இல்லையா என்கிற கேள்வியும் உண்டு. கடந்த 2023 ஆம் ஆண்டும் வெலிக்கட பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த பெண் ஒருவர் பொலிஸ் சித்திரவதையின் பின்னர் கொல்லப்பட்டிருந்தார்.

மலையகத்தைச் சேர்ந்த 42 வயதான ராஜன் ராஜகுமாரி என்கிற பெண் வீட்டு வேலைக்காக கொழும்புக்கு வந்துள்ளார். கொழும்பில் வெலிக்கட பகுதியில், தொலைக்காட்சி நிகழ்ச்சித் தயாரிப்பாளரான சுதர்மா ஜயவர்த்தன வீட்டில் பணிக்கு சேர்ந்துள்ளார். தனது நகையையும் வாசனைத்திரவியப் போத்தலையும் ராஜகுமாரி திருடிவிட்டார் எனத் தெரிவித்து சுதர்மாவினால் வெலிக்கட பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடளிக்கப்பட்டது. இதனையடுத்துப் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்ட ராஜகுமாரி சில தினங்கள் வெலிக்கட பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டிருந்தார். அதற்குப் பிறகு அவருக்கு ஏற்பட்ட சுகயீனம் காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். ஆயினும் சிகிச்சை பலனின்றி மருத்துவமனையில் அவர் உயிரிழ்ந்தார்.

தனது மனைவியின் மரணத்தில் சந்தேகமிருப்பதாகத் தெரிவித்து அவரின் கணவரான ராஜன் கொழும்பு புதுக்கடை நீதிமன்றத்தில் வழக்கொன்றை தாக்கல் செய்தார். இந்த வழக்கு விசாரணையின் போது ராஜகுமாரியின் உடற்கூற்றுப் பரிசோதனை இடம்பெற்றது. உடற்கூற்றுப் பரிசோதனையின்போது, ராஜகுமாரி பொலிஸ் நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டிருந்த காலத்தில் கூரிய ஆயுதமொன்றினால் தாக்கப்பட்டுள்ளமை தெரியவந்தது. இதனையடுத்து சம்பந்தப்பட்ட வெலிக்கட பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரி உள்ளிட்ட நான்கு பொலிஸ் அதிகாரிகளுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டது.

ஆகவே வெலிக்கட பொலிஸ் நிலையம் என்பது சித்திரவதைக்கூடமாக இருக்கிறது என்பது உறுதியாகிறதல்லவா? நாட்டில் ஆட்சி மாற்றங்கள் நிகழ்ந்தாலும்கூட பொலிஸாரின் இந்தக் காட்டுமிராண்டித்தனங்களுக்கு முடிவில்லை என்பதையே அடுத்தடுத்து இடம்பெறும் பொலிஸ் நிலைய சித்திரவதைக் கொலைகள் உறுதிப்படுத்திக்கொண்டிருக்கின்றன.

இவ்விடத்தில் அண்மையின் இடம்பெற்ற இன்னுமொரு பொலிஸ் நிலையத் தற்கொலை பற்றியும் குறிப்பிடல் வேண்டும். இந்தச் சம்பவம் கடந்த மார்ச் மாதம் கொழும்பு, மருதானைப் பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்றது. கிளிநொச்சியைச் சேர்ந்த பெண் ஒருவர், மருதானைப் பகுதியில் தங்கியிருந்து சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபட்டு வந்திருக்கிறார். இது குறித்த வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள நிலையில், அவர் வழக்குகளுக்கு சமுகமளிக்காமல் தவிர்த்து வந்திருக்கிறார். எனவே அவருக்கு எதிராக நீதிமன்றத்தினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. சம்பவதினத்தன்று பொலிஸார் அவரைக் கைதுசெய்து மருதானை பொலிஸ் நிலையத்தில் தடுப்புக்காவலில் வைத்திருந்திருக்கின்றனர். அவ்வாறு தடுத்து வைத்திருக்கின்றபோது அவர் தற்கொலை செய்துகொண்டார் எனப் பொலிஸாரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. தடுத்து வைக்கப்படுகின்ற இடத்தில் எவ்வாறு தற்கொலை செய்ய முடியும்எனமனிதவுரிமையாளர்கள்கேள்வியெழுப்பியபோது, குறித்த பெண் தனது ஆடையைக் கழற்றி, அதனை தடுப்பு சிறையின் யன்னலில் மாட்டி தற்கொலை செய்துகொண்டார் எனப் பொலிஸ் தரப்பினால் சொல்லப்பட்டுள்ளது,

இதுபோலவே யாழ்ப்பாணத்திலும் உள்ள அனேக பொலிஸ் நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்கள் மீதான சித்திரவதைகள் அதிகம் இடம்பெறுகின்றன. ஒரு காலத்தில் சுன்னாகம் பொலிஸ் நிலையம் சித்திரவதைக்குப் பிரபலமானதாக இயங்கியது. பின்னர் வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலையத்தில் சம்பந்தமற்ற குற்றச்செயல் ஒன்றுக்காகத் தடுத்துவைக்கப்பட்டிருந்த அலெக்ஸ் என்கிற இளைஞர் பொலிஸார் மேற்கொண்ட சித்திரவதையின் பின்னர் இறந்தார். இந்தச் சம்பவத்தின் பின்னரும்கூட பல இடங்களில் பொலிஸ் சித்திரவதைகள் குறித்த செய்திகள் வெளியாகிக்கொண்டிருக்கின்றன. இவற்றைக் கட்டுப்படுத்த அரசும் பொறுப்பான நடவடிக்கைகள் எதனையும் எடுத்ததாகத் தெரியவில்லை. சித்திரவதையில் ஈடுபடும் பொலிஸாருக்கு வழங்கப்படும் அதியுச்ச தண்டனை இடமாற்றமாகவே இருக்கின்றது. மக்களுக்குப் பாதுகாப்பளிக்க வேண்டிய பொலிஸ் துறையே மக்களைக் கொன்றொழிக்கும் படையாக மாறிவருகின்றமையானது இலங்கைத் தீவின் துயரங்களில் ஒன்று.


SST
SPICES
& Things
Indian | Sri lankan | South Asian
Groceries & Take away
At SST Spices & Things, we pride ourselves on delivering top-notch customer service and offering high-quality food and groceries. Whether you're picking up your favorite spices, fresh produce, or delicious takeaways, we've got you covered!
7 days
10 am to 8 pm
SST Spices & Things
Where quality meets community
Location:
79 McIntyre Rd,
Sunshine North VIC 3020
Contact:
03 9417 2517
Email:
sstspicesnthings@gmail.com

எதிரொலி
ஆஸ்திரேலியா
ETHIROLI
குரல்:08 அதிர்வு: 93 பங்குனி 2025 தொ.பே:1800 960 162

## காலமெல்லாம் காவடி வாழ்க

"பல்லக்கை தூக்காதே ! பல்லக்கில் நீ ஏறு" என்று நினைத்தாலே இனிக்கும் என்ற படத்தில் ரஜினி பாடும் பாடல் ஒன்று. இந்த பாடல் வந்து 40 வருடங்கள் கழிந்தாலும் நம்மவர்கள் இன்றும் பல்லக்கு தூக்கிகளாக இருப்பதை நினைத்தால் வெட்கக்கேடாக இருக்கிறது. நாம் சொல்லவருவது என்னவென்றால் , புலம்பெயர்ந்த மண்ணில் பல காலத்திற்கு முன்பு நமக்கு எந்த வாய்ப்புகளும் கிடையாது. மண்ணில் கால் ஊன்றுவதற்கு ஒரு காலத்தில் நாம் இங்குள்ளவர்களுக்கு பல்லக்கு தூக்கினோம். புகழ்ந்தோம் .ஆடிப்பாடி மகிழ்ந்தோம். அதெல்லாம் சரிதான். இன்னும் எத்தனை வருடத்திற்கு இந்த கூத்து.

மேற்கு சிட்னியைச் சேர்ந்த புலம்பெயர்ந்த தமிழர் ஒருவர் வெகுகாலம் கட்சிக்காகவே பாடுபட்டவர். தேர்தல் நேரம் மட்டுமல்லாமல் மற்ற எல்லா நேரங்களிலும் அவர் தமிழ் மக்களுக்கென தொண்டு செய்து வருபவர். எல்லோராலும் பெரிதும் எதிர்பார்க்கப்பட்டது அவர் இந்த முறை மேற்கு சிட்னியில் உள்ள ஏதாவது ஒரு நாடாளுமன்ற தொகுதியில் போட்டியிடுவதற்கு கண்டிப்பாக வாய்ப்பு இந்த முறை கிடைக்குமென்று. ஆனால் வழக்கம்போல் இந்த முறையும் அவருக்கு வாய்ப்பு கிடைக்கவில்லை. அவரை விட்டுவிட்டு கட்சிக்கு மில்லியன் டாலர் நிதி கொடுத்த பணக்காரருக்கு மறுபடியும் வாய்ப்பு கொடுத்துள்ளது. அவர் அந்த தொகுதியில் வசிக்கவில்லையெனினும் ,சென்ற முறையில் மிகக் குறைந்த வித்தியாசத்தில் வென்றவர் என்பது நமக்கு எல்லோருக்கும் தெரியும் தானே. இந்த முறை அவருக்கு தொகுதியில் பெரும்பான்மை ஆதரவு கிடைக்காதெனினும், புலம்பெயர்ந்தோர் அதிகமாக வாழும் தொகுதியில் நம்மவருக்கு வாய்ப்பு கொடுக்காமல் ,நிதி கொடுத்தவருக்கு மறுபடியும் வாய்ப்பு கொடுத்து நாங்கள் தொழிலாளர் கட்சி அல்ல, ஒரு முதலாளி கட்சி என்று மறுபடியும் நிரூபித்துள்ளது.

போகட்டும் விடுங்கள் .அவர்கள் தங்கள் இனத்தை காத்துக்கொள்கிறார்கள் .எப்போதும் விட்டுக்கொடுப்பதில்லை. நம்மவர்களும் அவர்களோடு சேர்ந்துகொண்டு சால்வை அணிவிப்பதென்ன, வீரத்திலகம் இட்டுவிடுவதென்ன . காவடி சுமந்து ஆடுவதென்ன! ஒரே கூத்து தான். நம்மவருக்கு வாய்ப்பு கொடுக்காதவரை நாம் புறக்கணிக்க வேண்டாமா?. எப்போது நம் இனம் முன்னேறுவது?. அவர்கள் தங்கள் கோயிலுக்கு மண்டபம் கட்ட மில்லியன் டாலர் பணத்தை அறிவிக்கிறான் என்றால் சும்மாவா ? உங்களது வாக்குகள் வேண்டும் தானே? நாளைக்கு அவர்களா உங்களுடன் காலம்காலமாக துணைநிற்கப் போகிறார்கள்? நம்மவர்கள் என்று பல்லக்கில் உட்காருவது?.

ஒடுக்கப்பட்டவர்களுக்கு அரசியல் அதிகாரமே வலிமையான ஆயுதம் என்று அம்பேத்கார் சொன்னது நடைமுறை உண்மையல்லவா. சுந்தர ராமசாமி எழுதிய "பல்லக்கு தூக்கிகள்" கதையில் வேலையாட்களின் பணி என்பது பெரியவர் என்று அழைக்கப்படுபவரை பல்லக்கில் தூக்கி சுமப்பது மட்டுமே. ஒரு சமயத்தில் பெரியவரின் பயணம் ஒத்திவைக்கப்பட்டுவிடும். ஆனால் நாள்தோறும் பல்லக்கு தூக்கிக்கொண்டே பழகிய வேலையாட்கள் சும்மா இருக்காமல் பல்லக்கில் ஒரு அம்மிக்கல்லை வைத்துக்கொண்டு சுமக்கப்போயினர் என்று கதை முடியும். இந்தக் கதை மேலோட்டத்தில் நகைச்சுவை கதையெனினும் அதன் உள்ளடக்கம் நாம் பல்லக்கில் உட்காருபவர்களாக முன்னேறாவிட்டால் நாம் எப்பொழுதும் பல்லக்கு தூக்கிகளே. நாம் விழிப்புணர்வு அடைய வேண்டிய நேரமிது. எழுந்திரு தமிழா !!

# தேர்தல் சடுகுடு 2025

# சிவப்பு, நீலம் மற்றும் பச்சை

# கண்ணாமூச்சி ஆட்டம்



'அந்த மரத்தை வெட்டுவதற்காகக் கொண்டு வந்திருந்த கோடரி அதே மரத்தின் நிழலில்தான் வைக்கப் பட்டிருந்தது' – வண்ணதாசன்



ஆனந்தன் வசந்தா
கிருஷ்ணமூர்த்தி

*2025ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலானது ஆஸ்திரேலியாவின் வரலாற்றில் ஒரு முக்கியமான தருணமாகும். அல்பானீஸ் தலைமையிலான தொழிற்கட்சி அரசாங்கம் இரண்டாவது முறையாக பதவியேற்கவும், பீட்டர் டட்டனின் தலைமையிலான லிபரல்-தேசிய கூட்டணி மீண்டும் அதிகாரத்தை கைப்பற்றவும் தொடர்ந்து முனைப்புடன் செயலாற்றி வரும் இந்த வேளையில் , தொடர்ந்து வீழ்ச்சியடையும் பொருளாதார நிலைமை , மாறிவரும் சர்வதேச அரசியல் சார்புநிலை மற்றும் நாட்டின் எதிர்காலத்தை நோக்கிய பார்வைகள் குறித்த கடுமையான விவாதங்களின் பின்னணியில் இந்த தேர்தல் பிரசாரமானது முக்கியமான கட்டத்தில் உள்ளது. பிரசாரத்தின் முக்கிய இயக்கவியல், கருத்துக் கணிப்புகளின் போக்குகள், கொள்கை விவாதங்கள், ஊடக உத்திகள் மற்றும் ஆஸ்திரேலிய அரசியலின் வளர்ந்து வரும் நிலப்பரப்பு பற்றி இந்தக் கட்டுரையில் அலசவிருக்கிறேன்*

*ஆஸ்திரேலிய தேர்தல் அரசியலானது எப்போதுமுள்ள இரு கட்சிப் போட்டியைத் தாண்டி முன்னே நகர்ந்துள்ளது. 2022 ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் மூன்றில் ஒரு பங்கு வாக்காளர்கள் சிறு கட்சிகள் அல்லது சுயேச்சைகளை ஆதரித்தனர், மேலும் அந்தப் போக்கு இந்தத் தேர்தலிலும் தொடரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது, சுயேச்சைகள் நகர்ப்புறத் தொகுதிகளின் வெற்றியினை இலக்காகக் கொண்டுள்ளனர் மற்றும் பசுமைக் கட்சியினர் வரலாறு காணாத ஆதரவினை எட்டியுள்ளனர். பல வாக்காளர்கள் இரண்டு பெரிய கட்சிகள் மீதும் அதிருப்தி அடைந்துள்ளனர் மற்றும் மாற்றுக் கட்சிகளுக்கு திறந்த மனதுடன் ஆதரவளிப்பதும் பெருகியிருக்கிறது.*

### பந்தயத்தில் முந்தும் தொழிலாளர்கட்சி

*சமீபத்திய கருத்துக் கணிப்புகள் தொடர்ந்து லிபரல் கூட்டணியை விட தொழிலாளர்கட்சி முன்னிலை பெற்றுவருவதைக் காட்டுகின்றன. சமீபத்திய ராய் மோர்கன் கணக்கெடுப்பு, இரு கட்சி ஆட்சி விருப்ப அடிப்படையில் லேபர் 54.5%, லிபரல் கூட்டணி 45.5% ஆகவும் வாக்கு சதவிகிதம் இருக்கும் என்று தெரிவிக்கிறது, இது முந்தைய வாரத்தை விட லேபர் கட்சிக்கு ஒரு புள்ளி அதிகரிப்பு ஆகும். YouGov இன் கருத்துக் கணிப்பும் இந்தப் போக்கையே எதிரொலிக்கிறது, லேபர் 52.5% முதல் 47.5% வரை வாக்கு சதவிகிதம் இருக்கலாம் என்று சொல்கிறது, இது 18 மாதங்களில் இல்லாத அதிகபட்சமாகும்.*

*வாக்காளர் தீர்ப்பை தீர்மானிக்கும் முக்கியமான பிரச்சினைகள்:*

*1. விலைவாசி உயர்வு: 57% வாக்காளர்களின் முக்கியமான கவலை, பணவீக்கம், வட்டி விகித உயர்வு மற்றும் ஊதிய தேக்கம் ஆகியவையாகும்.*

*2. குடியிருப்பு பற்றாக்குறை : வீட்டுவசதி நெருக்கடி என்பது மிக முக்கியமான பிரசாரப் பிரச்சினையாக மாறியுள்ளது, இரு கட்சிகளும் பலவிதமான அதிரடி தீர்வுகளை சுடச்சுட நாள்தோறும் வழங்குகின்றன. (தேர்தல் வாக்குறுதிகள் எல்லாம் என்று நிறைவேறியிருக்கின்றன?. மக்களின் மறதி மேல் அரசியல்வாதிகளுக்கு அவ்வளவு நம்பிக்கை )*

*3. அதிகரித்து வரும் குற்றம் மற்றும் பாதுகாப்பு குறைபாடுகள் : குற்றம் பற்றிய கவலைகள், குறிப்பாக குயின்ஸ்லாந்து, விக்டோரியா மற்றும் நியூ சவுத் வேல்ஸ் மாகாணங்களில் அதிகரித்துள்ளன. இந்தப் பிரச்சினைகள் இரு முக்கியமான கட்சி ஆதரவாளர்களையும் பாதித்துள்ளது*


(07ஆம் பக்கம் பார்க்க)

**வாசகர் களம்**

எதிரொலியில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்கள் குறித்து வாசகர்களின் கருத்துகள் எதிர்பார்க்கப்படுகின்றன. காத்திரமான கருத்துகள் பிரசுரிக்கப்படும். அதுமட்டுமின்றி எதிரொலி பேசாத சமூக கருத்துகளையும் எழுதி அனுப்புங்கள்.

நன்றி

ஆசிரியர்பீடம், எதிரொலி



editor@ethiroli.com
PO Box 6313, Dandenong
Victoria 3175

# தேர்தல் சடுகுடு 2025
# சிவப்பு, நீலம் மற்றும் பச்சை
# கண்ணாமூச்சி ஆட்டம்

| Pollster | Labor (இரு கட்சி விருப்ப ம்) | Coalition (இரு கட்சி விருப்ப ம்) | Greens | Independents | One Nation | Trumpet of Patriots |
|---|---|---|---|---|---|---|
| Roy Morgan | 54.50% | 45.50% | 14.50% | 10% | 6% | 1% |
| YouGov | 52.50% | 47.50% | நிலையானது | 9% | 8.50% | 1% |

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

4. காலநிலை மாற்றம்: இது முக்கியமான பிரச்சினையாக இருந்தாலும், காலநிலை பற்றிய மக்களின் கவலைகள் 23% ஆகக் குறைந்துள்ளன, பொருளாதார மற்றும் பாதுகாப்பு குறித்த சிக்கல்கள் மக்களைப் பெரிதும் பாதித்திருப்பதே இந்த மாற்றத்தின் பின்னணி . கிரீன்ஸ் கட்சியினர் கூட காலநிலை பற்றிய பிரசாரங்களில் கொஞ்சம் அடக்கியே வாசிக்கின்றனர்.

5. சுகாதாரம் மற்றும் பொருளாதார மேலாண்மை: சுகாதார சேவைகள் மற்றும் கடும் பொருளாதார நெருக்கடி தொடர்பான பிரச்சினைகள் மக்களுக்கு பெரிதும் கவலை தருகின்றன.

### தேர்தல் பிரசார மற்றும் ஊடக உத்திகள்:

1. வீட்டிற்கு வெளியேயான மற்றும் டிஜிட்டல் விளம்பரம்:

தேர்தல் விளம்பரச் செலவு வரலாறு காணாத சாதனை அளவை எட்டியுள்ளது, 2025 பிரசாரத்திற்கான தேர்தல் செலவு $200 மில்லியனாக உயர்ந்துள்ளது , 2022 இல் இது $165 மில்லியனாக இருந்தது. அல்பானீஸ் அரசாங்கம் மட்டும் கடந்த ஆண்டில் அதன் விளம்பர பட்ஜெட்டை மூன்றில் ஒரு பங்காக அதிகரித்துள்ளது. டிஜிட்டல் தளங்களில் தவறான தகவல்கள் பரப்புதல் குறித்த கவலைகளுக்கு மத்தியில் (குறிப்பாக பேஸ்புக் மற்றும் இன்ஸ்டாகிராமில் மூன்றாம் தரப்பு உண்மை தகவல் சரிபார்ப்பை நிறுத்திய பிறகு), வீட்டிற்கு வெளியேயான (OOH) விளம்பரங்கள் ( பதாகைகள் ,நேரடி அழைப்புகள் மற்றும் இன்ன பிற) நம்பகமான ஊடகமாக மாறியுள்ளது.

2. ஊடகப் பாதிப்பு மற்றும் வாக்காளர் ஈடுபாடு

பாரம்பரியத் தொலைக்காட்சி மற்றும் வானொலி ஊடகங்களின் செல்வாக்கு வெகுவாக குறைந்துவிட்டது, அரசியல் செய்திகளுக்கு தொலைக்காட்சி அல்லது செய்தித்தாள்களை நம்பியிருக்கும் ஆஸ்திரேலியர்களின் எண்ணிக்கை குறைந்து வருகிறது. குறிப்பாக இளைய வாக்காளர்கள் மற்றும் சிறு கட்சிகளின் ஆதரவாளர்களுக்கு சமூக ஊடகங்களும் டிஜிட்டல் தளங்களும் இப்போது முதன்மை ஆதாரங்களாக உள்ளன, . இந்த மாற்றம் செய்திக் கட்டுப்பாட்டைச் சிக்கலாக்குவதோடு மட்டுமல்லாமல் தவறான தகவல்கள் பரவுவதின் அபாயத்தை அதிகரிக்கிறது. நம்பகமான விளம்பர சனல்கள் நேரடி வாக்காளர் ஈடுபாட்டை முன்னெடுப்பதையும் விட மிகவும் முக்கியமானதாக ஆக்குகின்றன.

### அல்பானிஸ் VS டட்டன்

1. தலைமைத்துவ பாணி மற்றும் பொதுமக்கள் கருத்து

அந்தோணி அல்பானீஸ் ஒரு நிலையான, ஆனால் நம்பகம் குறைந்த தலைவராகக் கருதப்படுகிறார். விலைவாசி உயர்வு அழுத்தங்களை அவரது அரசாங்கம் கையாண்ட விதம் வாக்காளர்களிடையே எதிரொலித்துள்ளது, இதனால் அவரது ஆதரவு -5% ஆகக் குறைந்துள்ளது - முதல் முறையாக அவரது பதவிக் காலத்தில் எதிர்ப்பு ,ஆதரவை விட அதிகமாக உள்ளது. இதற்கிடையில், டட்டன் ஒரு மாற்றுத் தலைவராக தன்னை முன்னிறுத்த போராடிவருகிறார் என்ற போதிலும் , எந்தத் தலைவரதும் தனிப்பட்ட செல்வாக்கு எந்த விதமான தேர்தல் நன்மையினை தரப்போவதில்லை.

2. தலைவர்களின் நேரடி விவாதங்கள்: அபத்தங்களின் காட்சி

அல்பானீஸ் மற்றும் டட்டன் இடையேயான இரண்டு தொலைக்காட்சி விவாதங்கள் "அபத்தமான விவாதம்" என்றே சொல்லமுடியும். பொதுவாக அயர்ச்சியளிக்கும் பிரசாரமாகவே இது இருந்தது. விவாதங்களில் குடியிருப்பு வசதி ஆதிக்கம் செலுத்தியது, இரு தலைவர்களும் திடீர் தீர்வுகளை வழங்கினர். அந்த தீர்வுகள் எவ்வளவு அபத்தமானவை என்று நிபுணர்களால் விமர்சிக்கப்பட்டது. "மூன்று ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததை விட நீங்கள் நன்றாக ஆட்சி வழங்கினீர்களா ?" என்ற வரியை டட்டன் மீண்டும் மீண்டும் பயன்படுத்துவது டொனால்ட் டிரம்பின் 2024 பிரசாரத்தை எதிரொலித்தது, ஆனால் குறிப்பிடத்தக்க பாதிப்பை ஏற்படுத்தத் தவறிவிட்டது.

### சுயேச்சைகள் மற்றும் சிறு கட்சிகளின் எழுச்சி

1. ஊரக ஆஸ்திரேலியா இலக்கு

2022 ஆம் ஆண்டில் நகர்ப்புற இடங்களை வென்ற "வெளிர்நீல" ( Teal ) சுயேச்சைகள் இப்போது ஊரக மற்றும் கிராமப்புற வாக்காளர்களின் மீது கவனம் செலுத்துகின்றன . சுயேச்சைகள் மற்றும் சிறு கட்சிகளுக்கான அடிமட்ட ஆதரவு இந்த தொகுதிகளில் அதிகரித்து வருகிறது, இது தொழிற்கட்சி மற்றும் லிபரல் கூட்டணியின் தொன்றுதொட்ட பழைய ஆதிக்கத்தை அசைக்கச் செய்கிறது.

2. பசுமை மற்றும் சிறு கட்சிகள் : தொடர்ச்சியான செல்வாக்கு

பசுமைக் கட்சியினர் கடந்த ஆறு மாதங்களில் ஒரு போதும் இல்லாத அளவுக்கு ஆதரவை அடைந்துள்ளனர். வரப்போகும் தொங்கு நாடாளுமன்றத்தில் முக்கியமான முடிவெடுப்பதில் இன்றியமையாதவர்களாக இருக்கப்போகும் வாய்ப்பு பெருகியுள்ளது. ஒன் நேஷன் மற்றும் கிளைவ் பால்மரின் ட்ரம்பெட் ஆஃப் பேட்ரியாட்ஸ் கட்சி ஆகியவை குறைவான வளர்ச்சியைக் கண்டிருக்கின்றன . அவர்களின் விலையுயர்ந்த விளம்பர பிரசாரம் மக்களைப் பொதுவாகக் கவரவில்லை.

3. செனட் மற்றும் அணி சேராமையாளர்களின் (cross bench ) போக்கு

முக்கியமான கட்சிகளுக்கான முதன்மை வாக்குகளின் தேக்க நிலைமை , சிறிய கட்சிகள் ஸ்திர நிலைமை போன்ற காரணங்களால் செனட் சபையில் எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை இருக்கப் போவதில்லை. இது மிகவும் சக்திவாய்ந்த குறுக்கு பெஞ்சிற்கு வழிவகுக்கும். வரப்போகும் சிறுபான்மை அரசாங்கத்தில் முக்கியமான சட்டங்கள் குறித்த அனைத்துத்தரப்பு பேச்சுவார்த்தைகளுக்கான வாய்ப்பை அதிகரிக்கும்.

2025 தேர்தல் பிரசாரத்தை "மிகவும் சோர்வான பிரசாரம்" என்று ஆய்வாளர்கள் விவரிக்கின்றனர், இரு முக்கிய கட்சிகளும் வாக்காளர்களை உற்சாகப்படுத்த போராடுகின்றன. சுயேச்சைகள் மற்றும் சிறிய கட்சிகளின் எழுச்சியானது பாரம்பரிய அரசியலில் பரந்த அதிருப்தியையும், உள்ளூர் பிரச்சினைகளுக்கு கவனம் செலுத்தும் பிரதிநிதித்துவத்திற்கான ஆதரவையும் பிரதிபலிக்கிறது. சர்வதேச நிகழ்வுகளுடன் தொடர்புடைய பங்குச்சந்தை வீழ்ச்சி உட்பட உலகளாவிய பொருளாதார உறுதியற்ற தன்மை போன்ற பொருளா- தார தேக்க நிலைமையால் வாக்காளர்கள், பதவியில் இருக்கும் அரசாங்கங்களுடன் ஒட்டிக்கொள்ளும் போக்கை வலுப்படுத்தியுள்ளனர். இந்தத் திடீர் மாற்றங்கள் , டட்டனின் தவறான அணுகுமுறைகள் அல்பானிஸ் தலைமையிலான லேபர் கட்சிக்கு நல் வாய்ப்பை வழங்கியிருக்கின்றன என்றே சொல்ல முடியும் .

இதுவரை பார்த்தவரையில் தொழிலாளர் கட்சியே பந்தயத்தில் முன்னணியில் உள்ளது, ஆனால் வாக்காளர்களின் நிலையற்ற தன்மை எந்தவிதமான முன்முடிவுகளுக்கும் வருவதை நிச்சயமற்றதாக்குகிறது. குறிப்பாக செனட் மற்றும் முக்கியமான விளிம்புநிலை இடங்களில் வாக்குகள் சிதறிப் போகும் வாய்ப்பினால் தொங்கு நாடாளுமன்றத்தையோ அல்லது அதிக செல்வாக்கு மிக்க மூன்றாவது கட்சியினையோ உருவாக்கக்கூடும். சுயேச்சைகளும் சிறு கட்சிகளும் அதிக இடங்களை வெல்லும் நிலையில் வரப்போகும் சிறுபான்மை அரசாங்கம் எந்தச் சட்டத்தையும் இயற்றுவதற்கு பல்வேறு கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தவேண்டியிருக்கலாம். இது பன்முக கட்சிகளின் ஜனநாயகத்திற்கு வழிவகுக்கும். கிரீன்ஸ் கட்சி தவிர மற்ற இரண்டு முன்னணி கட்சிகள் அகதிகள் வரவு மற்றும் நிரந்தர குடியுரிமை தொடர்பான விடயங்களில் மிகவும் அடக்கியே வாசிக்கின்றன.

யார் அரசாங்கத்தை அமைத்தாலும் உடனடியாக மிகவும் கடின சவால்களை எதிர் கொள்ளும் சூழ்நிலையே உள்ளது : விலைவாசி உயர்வு தொடர்பான அழுத்தங்களை நிவர்த்தி செய்தல், குடியிருப்பு மனைகளின் மலிவு விலையை மீட்டெடுப்பது, காலநிலை மாற்றத்திற்கு பதிலளிப்பது மற்றும் கொந்தளிப்பான, நெருக்கடியான மற்றும் நிச்சயமற்ற உலகளாவிய சூழலில் பொருளாதார ஸ்திரத்தன்மையைப் பராமரித்தல் போன்ற பல பிரச்சினைகளை சமாளித்தே ஆகவேண்டும்.

இறுதியாக கட்டுரையினை முடிப்பதற்கு வாத்தியாரையே துணைக்கும் அழைக்கும் இக்கட்டான நிலைமை (ஒரு வேளை இந்த அயர்ச்சியளிக்கும் தேர்தல் பிரசாரங்களினால் ஏற்பட்ட சோர்வு நிலையோ என்னவோ). எழுத்தாளர் சுஜாதா வாசகர் ஒருவரின் கேள்விக்கு இவ்வாறாக பதில் கூறினார். (இங்கே இருக்கிற அரசியல்வாதிகள் எங்கே துண்டு போடுகிறார்கள் என்று நீங்கள் கேட்கலாம். தேர்தல் காலம் வந்துவிட்டால் இங்குள்ளவர்களுக்கு நமது ஆட்கள் சால்வை அளித்து அந்தக் குறையைப் போக்கியிருக்கின்றனர்.)

### அரசியல்வாதி துண்டு போடலாமா?

வீட்டில் போடலாம். நாட்டைப் போடக்கூடாது.

யார் ஆட்சிக்கு வந்தாலும் நம்மை துண்டு போடாமல், பட்ஜெட்டில் துண்டு விழாமல் பார்த்துக்கொண்டால் நான் தன்யனாவேன். ■




உ
குஹமயம்
ஸ்ரீலங்கா யாழ்ப்பாணம்
வாழ்வு பெற்ற வல்லி
சோழ இளவரசி மாருதப்புரவீகவல்லியின்
மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி கோவில்
மாவை ஆதீனப் பேரரசு மாவை ஆதீனம்
மஹாவல்லி கஜவல்லி சமேத ஸ்ரீ கந்தசுவாமியாரது
அனுகிரகத்தினால் நடைபெறவிருக்கும்
ஸம்புரோக்ஷண சித்விலாஸ
மஹாகும்பாபிஷேக பெருவிழா
விஞ்ஞாபன பத்திரிகை
பங்குனி மீ 28ம் நாள் 11/04/2025 வெள்ளிக்கிழமை
காலை 08:07 மணி முதல் 10:09 வரை உள்ள சுபமுகூர்த்தத்தில் நடைபெறும்.
அனைவரும் வருக! மாவைக்கந்தன் திருவருள் பெறுக!!

# ஆளில்லா விமானத் தாக்குதல்! எதிர்க்கட்சித் தலைவர் குடும்பத்தோடு குறிவைப்பு!!

● ஆர்.எஸ்.

ஆஸ்திரேலியாவில் கூட்டாட்சித் தேர்தலுக்குரிய பிரசாரப் போர் உக்கிரமாக இடம்பெற்றுவரும் நிலையில், நிழல் பிரதமராகக் கருதப்படும் எதிர்க்கட்சித் தலைவர் பீட்டர் டட்டன் மீதான தாக்குதல் திட்டமானது அனைத்துலக சமூகத்தினதும் கவனத்தை ஈர்த்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவருக்கும், அவரது குடும்பத்தாருக்கும் 24 மணிநேர பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் வலுத்துள்ளது.







### தாக்குதல் திட்டம் என்ன?

பிரிஸ்பேனில் உள்ள எதிர்க்கட்சித் தலைவரின் வீடுமீது ட்ரோன் மற்றும் வீட்டில் தயாரிக்கப்பட்ட வெடிபொருட்களைப் பயன்படுத்தி தாக்குதல் நடத்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட திட்டம் வெளியாகி, பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்தத் திட்டத்தை வகுத்தவர் 16 வயது சிறுவன் என்பது மேலும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. குறித்த சிறுவன் பிரிஸ்பேனில் உள்ள தனியார் பாடசாலையொன்றில் கல்வி பயின்று வருகின்றார்.

'இணையத்தளங்கள் மற்றும் ஏனைய காணொளிகளின் உதவியுடன் வெடிபொருட்களை தயாரிப்பதற்குரிய பயிற்சியை இவர் பெற்றுள்ளார். வெடிபொருட்களை தயாரிப்பதற்குரிய இரசாயனங்களையும் கொள்வனவு செய்துள்ளார்' என ஆஸ்திரேலிய பெடரல் பொலிஸார் முன்னெடுத்த விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கடந்த மே முதல் ஜூலை மாதம் வரை அவர் தாக்குதலுக்கு தயாராகிவந்துள்ளார் எனவும் தகவல் வெளியாகியுள்ளது.

பிரிஸ்பேனில் உள்ள வீட்டிலேயே தனது மனைவி மற்றும் மூன்று குழந்தைகளுடன் எதிர்க்கட்சித் தலைவர் வசித்துவருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

### சிறுவனின் தற்போதைய நிலை?

பொலிஸ் காவலுக்கு எடுக்கப்பட்ட இந்தச் சிறுவன், சிறார் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டார். இது பயங்கரவாதத் தாக்குதல் திட்டம் என்பதால் அவர் விக்டோரிய உயர்நீதிமன்றத்தை எதிர்கொள்ள நேரிடும் என தெரியவருகின்றது.

சிறுவனுடன் தொடர்பில் இருந்தவர்கள் யார்?, தாக்குதல் திட்டத்துக்கு உதவியவர்கள் யார்? தாக்குதலுக்கான காரணம் என்ன? இதில் வெளியகச் சக்திகள் உள்ளனவா ?என்பன உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் ஆஸ்திரேலிய பாதுகாப்பு தரப்புகள் விசாரணைகளை நடத்திவருகின்றன.

வயது காரணமாக சிறுவனின் பெயர் வெளியாகவில்லை. எனினும், பயங்கரவாதச் செயல் என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளதால் அவனுக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்படலாம் என சட்டத்துறை நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

### பிரசாரத்துக்கு பாதிப்பா?

தாக்குதல் சதித்திட்டம் தீட்டிய இந்தச் சிறுவன் கைது செய்யப்படும்வரை இது தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் எதையும் அறிந்திருக்கவில்லை என தெரியவருகின்றது. தற்போது தான் உட்பட தனது குடும்பம் இலக்கு வைக்கப்பட்டுள்ளதை எதிர்க்கட்சித் தலைவர் உறுதிப்படுத்தியுள்ளார்.

எனினும், கூட்டாட்சித் தேர்தலுக்குரிய பிரசாரப் போரை நிறுத்தப்போவதில்லை என எதிர்க்கட்சித் தலைவர் அறிவித்துள்ளார். அவரின் பாதுகாப்பு தொடர்பில் லிபரல் கூட்டணி கூடுதல் கரிசனை செலுத்தியுள்ளமையையும் அவதானிக்க முடிகின்றது.

இதற்கிடையில் இந்தத் தாக்குதல் திட்டத்தை முறியடித்து, அசம்பாவிதம் எதுவும் நடக்காமல் இருப்பதை உறுதி செய்த ஆஸ்திரேலிய பெடரல் பொலிஸாருக்கு எதிர்க்கட்சித் தலைவர் நன்றி தெரிவித்துள்ளார்.

### பிரதமர் கண்டனம்

எதிர்க்கட்சித் தலைவர்மீதான தாக்குதல் திட்டத்தை பிரதமர் அந்தோனி அல்பானீஸி வன்மையாகக் கண்டித்துள்ளார். இது தொடர்பில் பீட்டர் டட்டனுடன் அவர் கலந்துரையாடியுள்ளார் என தெரியவருகின்றது.

ஆஸ்திரேலியாவில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குரிய அச்சுறுத்தல் அண்மைக்காலங்களில் அதிகரித்துள்ளது என்பதை பிரதமர் ஏற்றுக்கொண்டுள்ளார். இது தொடர்பில் பெடரல் பொலிஸார் உரிய நடவடிக்கைகளை முன்னெடுப்பார்கள் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இஸ்ரேல், ஹமாஸ் போரின் தாக்கம் ஆஸ்திரேலியாவிலும் எதிரொலித்தது. மிகப்பெரிய போராட்டங்களும் நடத்தப்பட்டுவந்தன. இந்நிலையில் சிட்னியிலுள்ள பிரதமரின் அரசியல் அலுவலகம் பாலஸ்தீன ஆதரவாளர்களால் இலக்கு வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

### அரசியல்வாதிகளுக்கு அச்சுறுத்தல்

அதேவேளை, 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் ஆஸ்திரேலிய அரசியல்வாதிகளுக்கு எதிராக அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டமை தொடர்பில் ஆயிரத்து 9 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என பெடரல் பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

2014 ஆம் ஆண்டு குடியேற்றம் மற்றும் எல்லைப் பாதுகாப்பு அமைச்சராக பீட்டர் டட்டன் பதவி வகித்தார். எனவே, அன்று முதல் அவருக்கு உயர் மட்டப் பாதுகாப்பு வழங்கப்பட்டுவருகின்றது என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

"பாலியல் வன்கொடுமைகளில் ஈடுபட்டவர்கள் மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களில் ஈடுபட்ட நபர்களின் விசாக்களை நான் இரத்து செய்துள்ளேன். அச்சுறுத்தல்களால் அந்த முடிவை மாற்றப்போவதில்லை.' என பீட்டர் டட்டன் திட்டவட்டமாக அறிவித்துள்ளார்.

லிபரல் கட்சியின் பிரசார செய்தித் தொடர்பாளர் ஜேம்ஸ் பேட்டர்சன், பீட்டர் டட்டனுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் தற்போது 24 மணி நேரமும் தனிப்பட்ட பொலிஸ் பாதுகாப்பு தேவை என்று வலியுறுத்தியுள்ளார். அச்சுறுத்தல்கள் இருந்தாலும் கூட்டாட்சி தேர்தலுக்குரிய பிரசாரம் பாதிக்கப்படமாட்டாது எனவும் அவர் தெரிவித்துள்ளார். ■




# விடுதலை குறித்தும் விரைவில் பாடல் வரும்

## மெல்பேர்னில் வைத்து இசையமைப்பாளர் யுவன்

● ஜேஜே

ஆஸ்திரேலியாவில் இசை ரசிகர்களுக்கு, இசை விருந்தளித்து மகிழ்விப்பதற்காக வருகை தந்திருக்கின்றார் பிரபல இசையமைப்பாளர் யுவன் சங்கராஜா. MAESTRO Productions ஏற்பாட்டில் குறித்த இசை நிகழ்வு எதிர்வரும் முதலாம் திகதி சிட்னியிலும், மூன்றாம் திகதி மெல்பேர்ணிலும் நடைபெறவுள்ளது. யுவனின் இசையில் அன்ரியா, ஹரிசரண், ஸ்ரீநிசா, விஸ்ணு பிரியா எம் சி சன்னா, அதித்தயா, சஞ்சனா, சத்யன் ஆகியோர் பாடல்களை பாடவுள்ளனர். இவர்களுடன் இணைந்து பிரேம்ஜீயும் கலக்கவுள்ளார். இந்நிகழ்வை முன்னிட்டு இடம்பெற்ற ஊடகவியலாளர்களின் சந்திப்பின் போது எதிரொலிக்கு வழங்கப்பட்ட நேரத்துக்குள் கேட்கப்பட்ட கேள்விகளும், வழங்கப்பட்ட பதில்களும் வருமாறு,

**கேள்வி: எலோற்றோனிக் மூலம் இசையமைப்பது குறித்த உங்கள் தந்தை விமர்சனத்தை முன்வைத்திருந்தார். அதனை எப்படி பார்கிறீர்கள்..? அதனை மாற்ற முயற்சிக்கிறீர்களா?**

பதில்: நல்ல விசயம் தான். ஆனாலும் எனது மூளையும் குரலும் தான் முதலில் இசையை உருவாக்கும். அதற்கு அப்புறம் தான் அது பாடலாக வருகிறது.

**கேள்வி: நீங்கள் எல்லா விதமான உணர்வுகளையும் பாடல்கள் ஊடாக வெளிக்கொண்டு வந்துள்ளீர்கள். விடுதலை குறித்த பாடல் உங்களிடமிருந்து வரவில்லையே..?**

பதில்: விரைவில் வரும்.

**கேள்வி: உங்களின் ரசிகர்கள் உங்களை நெருங்குவது - அதாவது படம் எடுத்துக்கொள்வதில் ஒரு இடைவெளி காணப்படுகிறதே..?**

பதில்: அது ஏற்பாட்டாளர்கள் கையில்தான் உள்ளது.

**கேள்வி: நீங்கள் கோரிக்கை வைக்கலாம் தானே..?**

பதில்: பல நிகழ்வுகளின்போது நான் கோரிக்கை வைத்துள்ளேன், ரசிகர்களுக்கு நெருக்கமாகவே இருக்கவேண்டும் என்று நான் தனிப்பட கோரிக்கை விடுத்திருக்கிறேன். ஏற்பாட்டாளர்கள் தள்ளித் தான் வைப்பார்கள். ஆனாலும் நான் கோரிக்கை வைத்துள்ளேன்.

**கேள்வி: உங்கள் இசையில் ஈழத்து தமிழர்களும் பாடுவார்களா..?**

பதில்: நிச்சயமாக.. மே முதலாம் திகதி - Hordern Pavilion, Sydney, மே மூன்றாம் திகதி – John Cain Arena, Melbourne இலும் நடைபெறவுள்ளது https://premier.ticketek.com.au/shows/show.aspx?sh=YUVANSR25 என்ற இணைய முகவரியில் முற்பதிவு செய்யலாம் எனஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். ■

# உயரப் பறக்கும் தமிழன் அபிஷேக் மாறன்

# “புலம்பெயர்ந்த தமிழர்கள் 10 மடங்கு கடுமையாக உழைக்க வேண்டும்”

**சிட்னியில் வாழ்ந்துவரும் அபிஷேக் மாறன் ‘தி ஃபண்ட்ரைசிங் ப்ளூபிரிண்ட்’ என்ற விரிவான இளங்குழும நிறுவனர்களுக்கான (Startup Founders) வழிகாட்டி நூலை எழுதியுள்ளார். பொதுவாக வெள்ளையர்கள் மட்டுமே கோலோச்சும் முதலீடு வணிகத்தில் ஒரு தமிழராக அபிஷேக் அவர்களின் சாதனை அளப்பரியது. 2024-ஆம் ஆண்டில் போர்ப்ஸ் இதழில் 30 வயதிற்குட்பட்ட 30 சாதனையாளர்களுள் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அவர் ‘எதிரொலி’க்காக வழங்கிய நேர்காணல் இது.**

**நேர்கண்டவர்: ஆனந்தன் வசந்தா கிருஷ்ணமூர்த்தி**

**எதிரொலி : முதலில் ஒரு சம்பிரதாயமான கேள்வி. இந்த முதலீட்டு துறையில் எப்படி நுழைந்தீர்கள். உங்கள் பின்னணி பற்றிக் கூற முடியுமா?**

**அபி:** நான் சுமார் நான்கு ஆண்டுகளுக்கு முன்பு அதாவது 2021 ஆம் ஆண்டில் துணிகர முதலீட்டாளராக (Venture Capitalist - VC ) பணிபுரியத் தொடங்கினேன். 2018 ஆம் ஆண்டு பட்டப் படிப்பு படித்த பிறகு Super Funds and Endowments போன்ற பெரிய முதலீட்டாளர்களுக்கு ஆலோசனை வழங்கும் Cambridge Associates என்ற ஆலோசனை நிறுவனத்தில் சேர்ந்தேன். சூப்பர் ஃபண்டுகள் முதலீடு செய்யும் துறைகளில் ஒன்றான துணிகர மூலதனம் ( Venture Capitalists) உட்பட பல்வேறு சொத்து நிலைமைகளை ( Asset Classes ) ஆராய்வதில் எனது பங்கு இருந்தது. ஆஸ்திரேலியாவின் VC சந்தை இன்னும் வளர்ந்து வரும் நிலையில், அதற்கு உண்மையான ஆற்றல் இருப்பதை உணர்ந்தேன், அது எனது ஆர்வத்தைத் தூண்டியது. சுமார் இரண்டரை ஆண்டுகள் Cambridge Associates-ல் பணிபுரிந்த பிறகு, UpStreet என்ற ஸ்டார்ட்அப்பில் பயிற்சியாளாராகச் சென்றேன். நான் அங்கே பொருள் தயாரிப்பு , வளர்ச்சி மற்றும் செயற்பாடுகள் துறைகளில் பணியாற்றினேன், ஆரம்பக் கட்ட இளங்குழுமங்கள் (startup ) எவ்வாறு செயற்படுகின்றன என்பதையும் கற்றுக்கொண்டேன். அப்பொழுது நான் முன்பு என்னை நேர்காணல் செய்த Folklore என்ற VC நிறுவனத்துடன் தொடர்பில் இருந்தேன். பிறகு அங்கு எனக்கு VCயாக பணிபுரியும் வாய்ப்பு கிடைத்தது . ஒன்றரை ஆண்டுகளுக்குப் பிறகு, நான் எனது தற்போதைய நிறுவனமான Rampersandக்கு மாறினேன். நான் தற்போது இங்கே இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக பணி புரிந்து வருகிறேன் .

**எதிரொலி :ஏஊ என்றால் என்னவென்று எளிதாக விளக்க முடியுமா ?**

**அபி:** துணிகர மூலதனம் (VC) என்பது மிக வேகமாக வளர விரும்பும் வணிகங்களுக்கு, பொதுவாக தொழில்நுட்பம் அல்லது மென்பொருள் நிறுவனங்களுக்கு நிதியளிக்கும் ஒரு முறையாகும். மென்பொருளை மீண்டும் மீண்டும் பயன்படுத்த முடியும் என்பதால் இந்த வணிக அல்லது இளங்குழுமங்கள் பல வாடிக்கையாளர்களுக்கு கூடுதல் செலவு இல்லாமல் மிக விரைவாகச் சேவை செய்ய VC நிறுவனம் உதவி செய்கிறது. தயாரிப்பு மேம்பாடு, பிராண்டிங் மற்றும் வாடிக்கையாளர் வளர்ச்சியில் முதலீடு செய்வதன் மூலம் VC நிதியுதவி அவர்களுக்கு விரைவாக முன்னேறுவதற்கு உதவுகிறது. VC நிறுவனங்கள் பணக்கார முதலீட்டாளர்கள் (வரையறுக்கப்பட்ட கூட்டாளர்கள் என்று அழைக்கப்படுபவர்கள்) மற்றும் தொடக்க நிறுவனர்களுக்கு இடையே ஒரு பாலமாகச் செயல்படுகின்றன, விரைவான வளர்ச்சியைத்



தூண்டுவதற்கு பணத்தை எங்கு முதலீடு செய்வது குறிப்பாக எந்த startup நிறுவனங்களுக்கு கொடுக்க வேண்டும் என்பதை தீர்மானிக்கின்றன.

**எதிரொலி : VC-கள் எவ்வாறு தேவதை முதலீட்டாளர் ( Angel Investors ) மற்றும் தனியார் பங்கு நிறுவனங்களிலிருந்து (Private Equity) வேறுபடுகிறார்கள்?**

**அபி:** ஏஞ்சல் முதலீட்டாளர்கள் பொதுவாக தொடக்க நிலையிலேயே அதாவது எந்த ஒரு நிறுவனத்தின் தயாரிப்பும் வெறும் யோசனையாக இருக்கும்போது ஆதரிப்பார்கள், மேலும் எதையும் உருவாக்குவதற்கு முன்பு நிறுவனருக்கு நிதிஉதவி அளித்து ஆதரவளிப்பார்கள். சில துணிகர மூலதன (VC) நிதிகளும் இவ்வாறு முன்கூட்டியே முதலீடு செய்கின்றன, ஆனால் பெரும்பாலானவை குறைந்தபட்சம் ஒரு அடிப்படை தயாரிப்பு ( Basic Product ) அல்லது வழிமுறை கிடைக்கும் வரை காத்திருக்கின்றன. நிறுவனர்கள் சந்தையைப் பற்றி சோதித்துப் பார்க்கும்போது, VC நிறுவனங்கள் தங்கள் சொந்த முதலீட்டாளர்களிடமிருந்து (வரையறுக்கப்பட்ட கூட்டாளர்கள் என்று அழைக்கப்படுபவர்கள்) பணத்தைப் பயன்படுத்தி பல தொடக்க நிறுவனங்களுக்கு நிதியளிக்கின்றன, குறைந்த காலத்தில் அதிக வளர்ச்சியே அவற்றின் நோக்கமாகும் . மறுபுறம் தனியார் பங்கு (PE) நிதிகள் பெரும்பாலும் நிறுவப்பட்ட வணிகங்களில் முதலீடு செய்கின்றன, சில சமயங்களில் முழு கட்டுப்பாட்டையும் வாங்குகின்றன, மேலும் அவற்றை மீண்டும் விற்பனை செய்வதற்கு முன்பு செயல்பாடுகளை மேம்படுத்த வேலை செய்கின்றன. முக்கியமான வேறுபாடு என்னவென்றால், ஏஊ பொதுவாக இளம் நிறுவனங்களில் சிறிய பங்கை எடுத்துக்கொள்கிறது, அதே நேரத்தில் PE முன்னேறிய நிறுவன வணிகங்களில் பெரும்பான்மையான பங்கை எடுத்துக்கொள்கிறது.

**எதிரொலி : அமெரிக்கா, இங்கிலாந்து அல்லது இந்தியா போன்ற நாடுகளுடன் ஒப்பிடும்போது ஆஸ்திரேலியா ஏன் குறைவான இளங்குழும நிறுவனங்கள் மற்றும் நிறுவனர்களைக் கொண்டுள்ளது? இதற்குப் பின்னால் உள்ள காரணிகள் யாவை?**

**அபி:** பல காரணங்கள் இருப்பினும் முதன்மையான காரணம், எண்ணிக்கை தான். ஆஸ்திரேலியாவில் மக்கள் தொகை குறைவாக இருப்பதால் ஸ்டார்ட்அப்கள் குறைவாகவே உள்ளன - அமெரிக்கா அல்லது இந்தியா போன்ற நாடுகளுடன் ஒப்பிடும்போது இது மிகவும் சிறியது (40லிருந்து 100 மடங்கு குறைவு ) . மற்றொரு காரணம், ஆஸ்திரேலியர்கள் வேகமான தொழில்நுட்பம் மற்றும் ஸ்டார்ட்அப் சுற்றுச்சூழல் அமைப்பை அவ்வளவு அதிகமாக எதிர் கொண்டதில்லை. இருப்பினும் தொடர்ந்து தொழில்நுட்ப விஷயங்கள் மாறிக்கொண்டே இருக்கின்றன. அட்லாசியன் மற்றும் கேன்வா போன்ற வெற்றிகரமான நிறுவனங்கள் மற்றவர்களை ஊக்குவிக்கின்றன, மேலும் இப்போது அதிகமான மக்கள் ஸ்டார்ட்அப் துறையில் நுழைகிறார்கள். சமீபத்திய ஆண்டுகளில், ஆஸ்திரேலியாவில் நூற்றுக்கணக்கான ஸ்டார்ட்அப்களுக்கு நிதியளிக்கப்பட்டுள்ளன, மேலும் அது அமெரிக்கா அல்லது இங்கிலாந்தை விட இன்னும் மிகக் குறைவாக இருந்தாலும், சுற்றுச்சூழல் அமைப்பு , அதிக ஒப்பந்தங்கள் மற்றும் புதிய யூனிகார்ன்கள் உருவாகி சீராக வளர்ந்து வருன்றன. இன்னும் வரும் நாட்களில் இன்னும் அதிக வாய்ப்புகள் ஏற்படுவதற்குண்டான சாத்தியக்கூறுகள் இருக்கின்றன.

**எதிரொலி : ஆஸ்திரேலியர்கள் புதிய தொழில்நுட்பங்களை ஏற்றுக்கொள்ள தயங்குவதற்கு ஒரே காரணம் மக்கள் தொகையா? அல்லது கலாசாரம் சார்ந்த தயக்க நிலையா? அமெரிக்காவைப் போல ஆஸ்திரேலியா அதிக ஸ்டார்ட்அப்களையும் யூனிகார்ன்களையும் உருவாக்க எவற்றை மாற்ற வேண்டும் அல்லது மாற வேண்டும் ?**

**அபி:** ஆஸ்திரேலியர்கள் வரலாற்று ரீதியாக மாற்றம் மற்றும் தொழில்நுட்பத்தை ஏற்றுக்கொள்வது குறித்து எப்பொழுதும் எச்சரிக்கையாகவே இருந்து வருகின்றனர், பெரும்பாலும் “எந்தவொரு சாதனமும் உடையாவிட்டால், அதை மேம்படுத்த வேண்டாம்” என்ற மனநிலையில் ஒட்டிக்கொண்டிருக்கிறார்கள். இந்த அணுகுமுறை, “டால் பாப்பி சிண்ட்ரோம்” (தனியாகத் தெரிவதைத் தவிர்க்க மக்கள் தங்கள் வெற்றியைக் குறைத்து மதிப்பிடுவது) போன்ற கலாசார சார்ந்த விதிமுறைகளுடன் தங்களை இணைத்துக் கொண்டு புதுமைகளை உருவாக்குவதை மெதுவாக்கியுள்ளது. இருப்பினும், விஷயங்கள் மாறிக்கொண்டே இருக்கின்றன, குறிப்பாக உலகளாவிய வெற்றிக் கதைகளால் ஈர்க்கப்பட்டு, ஸ்டார்ட்அப்களை உருவாக்கி முதலீடு செய்யத் தொடங்கும் இளைய தலைமுறையினரிடையே தொடர்ந்து விரைவாக வளர்ந்து வருகிறது. அதிக அனுபவம் வாய்ந்த நிறுவனர்கள் இப்போது தாங்கள் கற்ற பாடங்களை திறந்த மனதுடன் பகிர்ந்து கொள்கிறார்கள், இது மிகவும் முக்கியமானது. உலகளவில் அதிகமான ஆஸ்திரேலிய ஸ்டார்ட்அப்கள் வெற்றி பெறுவதைக் காண, திறந்த வெளிப்படையான ஒளிவு மறைவில்லாத அறிவுப்பகிர்வு, துணிச்சலான லட்சியம் வெற்றி மற்றும் தோல்வி இரண்டிலிருந்தும் கற்றுக்கொள்ள ஊக்குவிக்கும் வலுவான ஆதரவு அமைப்புகள் இருக்க வேண்டும்.

**எதிரொலி : புதிய யோசனைகளின் உருவாக்கம், ஸ்டார்ட்அப்களைப் பற்றி அறிதல் மற்றும் தொழில்முனைவோரை ஆராயவும் மாணவர்களை ஊக்குவிக்க நமது பள்ளி மற்றும் பல்கலைக்கழக கல்வி நிறுவனங்கள் இன்னும் அதிகமாகச் செய்ய வேண்டும் என்று நினைக்கிறீர்களா?**

அபி: ஆம், பள்ளிகளில் தற்போதைய கல்வி முறை ஒரு தொழிலைத் தொடங்குவது அல்லது யோசனைகளை செயற்பாட்டிற்கு மாற்றுவது பற்றி அதிகம் கற்பிப்பதில்லை. பல்கலைக்கழகங்களில் இப்போது ஸ்டார்ட்அப்களை ஆதரிக்கும் குழுமங்கள் (Clubs), சங்கங்கள் மற்றும் ஊக்குவிக்கும் காரணிகள் முன்னரே இருந்தாலும், கடந்த பத்து ஆண்டுகளில் மட்டுமே அதிகம் வளர்ந்துள்ளன.

(11ஆம் பக்கம் பார்க்க)

# உயரப் பறக்கும் தமிழன் அபிஷேக் மாறன்

# “புலம்பெயர்ந்த தமிழர்கள் 10 மடங்கு கடுமையாக உழைக்க வேண்டும்”

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

இன்று அதிகமான மாணவர்கள் ஸ்டார்ட்அப்களில் சேரத் தயாராக உள்ளனர், மேலும் சிலர் தங்களை உள்ளடக்கிய சமூகத்தை (communities) உருவாக்குகிறார்கள். அமெரிக்காவில் இளைஞர்கள் பெரும்பாலும் ஆரம்பத்தில் அதாவது பள்ளிக்காலத்திலேயே நிறுவனங்களைத் தொடங்குகிறார்கள், மேலும் இந்த மனநிலை ஆஸ்திரேலியாவிலும் மெதுவாக வளர்ந்து வருகிறது. இருப்பினும், அட்லாசியன் அல்லது சேஃப்டிகல்ச்சர் போன்ற பல வெற்றிகரமான ஆஸ்திரேலிய ஸ்டார்ட்அப்கள் பரவலாக அறியப்படவில்லை, ஏனெனில் அவை அன்றாட நுகர்வோருக்கு அல்லாமல் பெரு வணிக நிறுவனங்களுக்கு சேவை செய்கின்றன. ஸ்டார்ட்அப் சுற்றுச்சூழல் அமைப்பை வளர்க்க, சமூகம் முழுவதும் அதிகமான மக்களை பங்களிக்க ஊக்குவிக்க வேண்டும், மேலும் இந்த வெற்றிக் கதைகளை மிகவும் வெளிப்படையாகவும் எளிதாகவும் பகிர்ந்து கொள்ள வேண்டும்.

**எதிரொலி : ஆஸ்திரேலியாவில் உள்ள பொது ஊடகங்கள் உள்ளூர் தொழில்நுட்ப தொடக்க நிறுவனங்களின் வெற்றிக் கதைகளை ஏன் முன்னிலைப்படுத்துவதில்லை, இந்த இருட்டடிப்பு எவ்வாறு பொதுமக்களின் விழிப்புணர்வையும் உணர்வையும் பாதிக்கிறது?**

**அபி:** ஆஸ்திரேலியாவில் வெளிவரும் முக்கியமான செய்தி ஊடகங்கள் பெரும்பாலும் வங்கிகள், சுரங்கம் போன்ற பாரம்பரியத் தொழில்கள் அல்லது அரசியல் மற்றும் வாழ்க்கைச் செலவு போன்ற பொதுவான சமூகப் பிரச்சினை சார்ந்த செய்திகள் தொடர்பிலேயே அதிக கவனம் செலுத்துகின்றன. அது மட்டுமின்றி இந்த ஊடகங்கள் தொழில்நுட்ப தொடக்க நிறுவனங்களைப் பற்றி மிக அரிதாகவே செய்தி வெளியிடுகின்றன. வணிக வெற்றி மற்றும் முதலாளித்துவத்தால் ஊடகங்கள் பெரிதும் இயக்கப்படும் அமெரிக்காவைப் போலல்லாமல், ஆஸ்திரேலியாவின் ஊடகங்கள் ஒரு பரந்த மற்றும் சமநிலையான அணுகுமுறையையே பெரும்பாலும் தங்கள் கவனத்தில் எடுக்கின்றன, இதனால் தொழில்நுட்பக் கதைகளை அவர்கள் பெரிதாக கண்டுகொள்வதில்லை . பலர் கேன்வா (Canva) அல்லது அட்லாசியன் (Atlassian) போன்ற உள்ளூர் தொடக்க நிறுவனங்களைப் பற்றி செய்தி மூலம் அல்ல, தனிப்பட்ட பயன்பாடு அல்லது அவர்களின் வேலைகள் மூலம் மட்டுமே அறிந்து கொள்வதற்கான வாய்ப்பிருக்கிறது. ஆனால் நிலைமை மாறிவருகிறது. மக்களுக்கு தொழில்நுட்பத்தில் ஆர்வம் அதிகரித்து வருகிறது, ஆனால் பத்திரிகையாளர்கள் இன்னும் பொது மக்கள் கவனத்தை ஈர்க்கக்கூடிய வழிகளில் இந்தக் கதைகளை எவ்வாறு சொல்வது என்பதைக் கற்றுக்கொள்ள வேண்டும். அதிகமான இளைஞர்கள் புதிய தொழில்நுட்ப நிறுவனங்களை தொடக்கி புதுமைகளை உருவாக்கும்போது, ஊடகக் கவனமும் வளரும் என்று எதிர்பார்க்கலாம், குறிப்பாக விவசாயம் மற்றும் காலநிலை தொழில்நுட்பம் போன்ற அன்றாட வாழ்க்கையை நேரடியாக பாதிக்கும் தொழில்நுட்பத்தைச் சுற்றி புதிய தொழில்நுட்ப நிறுவனங்களை தொடங்கும்போது இந்த மாற்றம் நிகழலாம்.

**எதிரொலி :சிறந்த எழுத்தாளர் மற்றும் VC முதலீட்டாளராகவும் இருக்கும் நீங்கள் , எந்தப் பாத்திரத்தை அதிகம் விரும்புகிறீர்கள். இரண்டில் உங்களுக்கு மிகவும் நிறைவைத் தருவது எது?**

**அபி:** உண்மையில், நான் ஒரு VC முதலீட்டாளராக இருப்பதை அதிகம் விரும்புகிறேன் . என்னைத் தவறாகப் புரிந்து கொள்ளாதீர்களே. எனக்கு எழுதுவது மிகவும் பிடிக்கும், அது எனக்கு இயல்பாகவே வரும் ஒன்று, ஆனால் VC யாக இருக்கும்போது , நான் ஒவ்வொரு நாளும் மிகவும் திறமையான, லட்சியமுள்ள மக்களுடன் பேச முடிகிறது. இவர்கள் பெரிய கனவுகளைக் கொண்டவர்கள், மிகப்பெரிய ஒன்றை உருவாக்க முயற்சிப்பவர்கள். சிறந்த விஷயம் என்னவென்றால், நீங்கள் அத்தகைய நிறுவனர்களைச் சுற்றி இருக்கும்போது, அவர்களின் ஆர்வம் மிகவும் எளிதாக உங்களை தொற்றிக்கொள்ளும் தன்மை கொண்டது.

சில நேரங்களில் அவர்கள் மேலோட்டமாக சலிப்பாகத் 



தோன்றும் விஷயங்களைப் பற்றி பேசலாம் , ஆனால் அவர்கள் அதை விளக்கும் விதம், அவர்களின் ஆற்றல், அதைப் பற்றிப் பேசும்போது அவர்கள் எப்படி ஒளிர்கிறார்கள் - அது உங்களையும் உற்சாகப்படுத்துகிறது. அந்த வகையான உணர்ச்சிபூர்வமான தொடர்பு மிகவும் சக்தி வாய்ந்தது. இது உண்மையில் நான் தேடும் ஒன்று: ஒரு நிறுவனர் அவர்கள் உருவாக்குவதைப் பற்றி எனக்கு ஆர்வத்தையும் உற்சாகத்தையும் ஏற்படுத்த முடிந்தால், அங்கு ஏதாவது சிறப்பு இருக்கிறது என்று எனக்குத் தெரியும். ஆனால் அவர்களால் அந்த ஆர்வத்தை வெளிப்படுத்த முடியாவிட்டால், தொடர்ந்து ஈடுபடுவது கடினம். ஆமாம், ஆர்வமுள்ளவர்களுடன் பணிபுரிவதன் மூலம் நீங்கள் பெறும் ஆற்றல் - அதுதான் எனக்கு VC ஆக இருப்பதை மிகவும் திருப்திகரமாக்குகிறது.

**எதிரொலி: ஒரு நிறுவனர் ஒரு சிறந்த யோசனையையும் வலுவான செயற்படுத்தலையும் கொண்டிருந்தாலும், அதைத் தெளிவாகத் தெரிவிக்க சிரமப்பட்டால் என்ன நடக்கும் - இதுபோன்ற சந்தர்ப்பங்களில் VC-கள் எவ்வாறு பதிலளிப்பார்கள்?**

**அபி:** ஒரு நிறுவனர் தங்களது நிறுவனத்தின் சிறப்பினை வெளிப்படுத்தமுடியாமல் சிரமப்படும்போது, VC-கள் வார்த்தைகளுக்கு அப்பால் என்னவெல்லாம் சிறப்பாக இருக்கிறதென்பதில் கவனம் செலுத்த முயற்சிக்கிறார்கள். தயாரிப்பு , ஆழமான சிந்தனை, பயனர் அனுபவத்திற்கான அக்கறை மற்றும் செயல் மூலம் போன்ற மற்ற விஷயங்களை தெளிவான ஆர்வத்தைக் காட்டும்போது நிறுவனரைப் பற்றிய நம்பிக்கை வளர்கிறது. இருப்பினும், பல நிறுவனர்கள் உணர்ச்சிவசப்பட்டு பேசிவிட்டு சிறப்பாக செயல்படுத்தப் படாமல் போகும் பொருத்தமின்மை ஒரு சிவப்புக் கொடி. சவால் என்னவென்றால், VC-கள் ஆண்டுக்கு ஆயிரக்கணக்கான உரைகளை (Pitch ) பார்க்கிறார்கள், சிலவற்றிற்கு மட்டுமே நிதியளிக்கிறார்கள், எனவே ஒரு ஆக்கத்தினை தெளிவாக விளக்கப்படாவிட்டால் அதை ஆழமாக ஆராய அவர்களுக்கு எப்போதும் நேரம் இருக்காது. இதன் பொருள் சிறந்த யோசனைகளைத் தவறவிடலாம். அதனால்தான் நான் எனது Fundraising Blueprint புத்தகத்தினை எழுதினேன். இந்த புத்தகமானது திறமையான ஆனால் தடுமாறும் தொடக்க நிறுவனங்கள்எவ்வாறு VC ஆர்வத்தை ஈர்த்தல், அவர்கள் தகுதியான நிதியைப் பெறுதல் மற்றும் சிறப்பாக தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ள கற்றுக்கொள்ள உதவும்,

**எதிரொலி :இந்தப் புத்தகத்தின் வாயிலாக VC செயல்முறையின் ரகசியங்களை வெளிப்படையாகப் பகிர்ந்து கொள்ள நீங்கள் ஏன் முடிவு செய்தீர்கள், பல ஏஊகள் பொதுவாக ரகசியமாக வைத்திருக்கும் தகவல்கள் அல்லவா இவை ?**

அபி: VC நடைமுறைகளை வெளிப்படையாகப் பகிர்ந்து கொள்வதன் பின்னணியில் உள்ள காரணம், திறமையான நிறுவனர்கள் தங்கள் ஆக்கங்களை எவ்வாறு திறம்படத் தெரிவிப்பது என்று தெரியாமல் இருக்க உதவுவதும், நிதி வாய்ப்புகளைத் தவறவிடாமல் தடுப்பதும் ஆகும். மூலதனத்தை திரட்டுவது ஒரு சிக்கலான நிறுவன செயல்முறையாக இருக்கலாம், மேலும் பல தொடக்க நிறுவனர்கள் ( Startup Founders ) VCகள் வணிகங்களை மதிப்பிடுவதற்குப் பயன்படுத்தும் மொழி அல்லது கட்டமைப்புகளைப் புரிந்து கொள்ளாததால் தோல்வியடைகிறார்கள். இந்த “ரகசியங்களை” பகிர்ந்து கொள்வதன் மூலம், தொழில்முனைவோருக்கு தங்கள் கருத்துகளை தெளிவாகவும் நம்பிக்கையுடனும் முன்வைக்க கருவிகளை வழங்குவதன் மூலம், ஆடுகளத்தை சமன் செய்வதே எனது குறிக்கோள். இந்த வெளிப்படைத்தன்மை நிறுவனர்களை தங்கள் வாய்ப்புகளை மாற்றியமைத்து மேம்படுத்தவும், நிதியைப் பெறுவதில் வெற்றிக்கான வாய்ப்புகளை அதிகரிக்கவும் தேவையான தகவல்களை அளிப்பதால் அவர்களின் கையோங்க வாய்ப்பளிக்கிறது . அதாவது மீனை வழங்குவதை விட அவர்களுக்கு “மீன்பிடிப்பது” எப்படி என்பதைக் கற்பிப்பதே எனது நோக்கமாகும். ரகசியங்கள்ரகசியமாக இருக்ககூடாது. வெளிப்படைத்தன்மை வேண்டும்.


**எதிரொலி :தனித்தன்மையான துறையில் ஒரு புலம்பெயர்ந்தவராக நீங்கள் ஏதேனும் பின்னடைவுகளைச் சந்தித்திருக்கிறீர்களா, அவற்றை எவ்வாறு சமாளித்தீர்கள்? இதே போன்ற சூழ்நிலைகளில் திணறும் மற்றவர்களுக்கு நீங்கள் என்ன ஆலோசனை வழங்குவீர்கள்?**

அபி: எந்தவொரு துறையிலும் மிக முக்கியம் நீங்கள் ஏற்படுத்தும் தொடர்புகள். நான் பணிபுரியும் முதலீடு சார்ந்த வணிக உலகில் பெரும்பாலும் ஆஸ்திரேலிய மற்றும் ஐரோப்பிய சமூகங்களைச் சார்ந்தவர்களே இருப்பதால் அந்த சமூகங்களில் இருந்து வருபவர்களுக்கு முன்னேறுவது மிக எளிது. நானோ புலம்பெயர்ந்த, சிறுபான்மை இந்தியத் தமிழன். எனவே பல்வேறு சவால்களை எதிர்கொண்டேன். மற்றவர்களைப் போலல்லாமல், கடின உழைப்பு, பொதுவிடங்களில் உரையாற்றுதல் , எழுத்து மற்றும் நிகழ்வுகளில் பங்குபெறல் மூலம் எனது சொந்த அடையாளத்தை உருவாக்க வேண்டியிருந்தது நம்பகத்தன்மையைப் பெறுவதற்கும் ,நிபுணத்துவத்தையும் , செயல்படுத்தலையும் நிரூபிக்க போராட வேண்டியிருந்தது. மற்றவர்களை விட அதிக முயற்சி எடுக்க வேண்டியிருந்தது. அதாவது 10 மடங்கு அதிகமாக உழைக்க வேண்டியிருந்தது. குடியேறியவர்களுக்கான எனது அறிவுரை என்னவென்றால் உங்களது தடைகளைத் தாண்டிச் செல்வது, தங்கள் துறைகளில் சிறந்து விளங்குவது மற்றும் மற்றவர்களுக்கு உதவுவது. நீங்கள் தனித்து நிற்கவேண்டுமானால் கடினமாக உழைக்க வேண்டும். அதாவது கவனிக்கப்படுவதற்கு அசாதாரணமாக உழைக்க வேண்டும்.

**எதிரொலி: புலம்பெயர்ந்த தமிழ் மக்களுக்கு குறிப்பாக பாரம்பரிய வேலைகளுக்கு வெளியே இடர்களை ஏற்றுக்கொள்வது மற்றும் எதிர்காலத்திற்கு தேவைப்படும் தொழில்நுட்பம் சார்ந்த தொழில்களைத் தொடர்வது குறித்து நீங்கள் என்ன செய்தியைப் பகிர்ந்து கொள்ள விரும்புகிறீர்கள்?**

அபி: ஆஸ்திரேலியாவில் உள்ள தமிழ் சமூகம் மக்கள் தங்கள் குழந்தைகள் குறிப்பாக மருத்துவர், வழக்கறிஞர் அல்லது பொறியாளர் போன்ற மதிப்புமிக்க, பாதுகாப்பான வேலைகளுக்கு மட்டுமே செல்ல வேண்டும் என்று நினைப்பதை கைவிட வேண்டும். அதிக இன்னல் மிகுந்த, இடர்களுடைய மற்ற தொழிநுட்பம் சார்ந்த இளங்குழும நிறுவனங்களை தொடங்குவதற்கு ஊக்குவிக்க வேண்டும். அமெரிக்காவில் பல வெற்றிகரமான இந்திய தொழில் முனைவோர் இந்த மரபான விதிமுறைகளைத் தாண்டிச் சென்று வெற்றி பெற்றுள்ளனர், ஆனால் ஆஸ்திரேலியாவில் உள்ள தமிழர்களிடையே இந்த தொழில்முனைவோர் உணர்வு இன்னும் இல்லை. எதிர்காலத்தை பற்றிய தாக்கமாக யோசிக்கவேண்டும் , குறுகிய கால கௌரவத்தில் சிக்கிக் கொள்ளாமல் இருக்கவேண்டும். ஜோஹோ மற்றும் ஃப்ரெஷ்வொர்க்ஸ் போன்ற வெற்றிகரமான தொடக்க நிறுவனங்களை உருவாக்கிய தமிழ்நாடு போன்ற இடங்களிலிருந்து வரும் வெற்றிக்கதைகள் புதிய முயற்சிகளில் ஈடுபட மற்றவர்களை ஊக்குவிக்க வேண்டும். இந்த மனநிலை மாற்றம், குறிப்பாக புலம்பெயர்ந்த தலைமுறையினரிடையே வளர்வதற்கு சிலகாலம் எடுக்கலாம் என்றாலும், எதிர்கால சந்ததியினர் தொழில்முனைவோர் மற்றும் இடர்களை ஏற்றுக் கொள்ளும் சாத்தியக்கூறுகள் அதிகமாகவே உள்ளன.

# நம் மூளையின் பக்கவாட்டுப் பகுதியான Temporal lobeஇல் ஏற்படும் வலிப்பின் தாக்கம் சில மத உணர்வுகளைத் தூண்டுமா?



மனநல மருத்துவர் ரைஸ் சிட்னி

மகாவிஷ்ணுவின் நேர்காணலில் அவர் வழங்கிய பதில்கள் மற்றும் அவரது சட்சங்கத்தில் இடம்பெற்ற கண்ணீர் மற்றும் உடல் நடுக்கங்கள் பற்றி மனநல மருத்துவர் ரைஸ் வழங்கிய கருத்துகளை பகிர்கின்றோம்.

ஒரு சில சாமியார்கள் அல்லது ஒரு சில மதக்கூட்டங்களில் பலர் கண்ணீர்விட்டு அழுவார்கள். சிலரது உடல் ஆடிக்கொண்டிருக்கும், தலையைச் சுழற்றுவர் சிலர், சிலர் ஒழுங்கில்லாத ஆட்டம் ஆடுவர், இப்படி பல காட்சிகளைக் காணக்கூடியதாக இருக்கும். இதற்குப் பின்னால் ஆன்மிகம் எல்லாம் கிடையாது.

இது ஒரு Hypnosis வகையில்தான் வரும். இந்த மாதிரியான Hypnosis வயப்படுபவர்களுக்கென்று சில பிரத்தியேகமான குணாதிசயங்கள் இருக்கின்றன. முதலாவது, அவர்கள் அனைவரும் 'எடுத்தார் கைப்பிள்ளையாக' இருப்பார்கள். இதனை ஆங்கிலத்தில் சொல்வதெனில் easily suggestible people எனலாம். இவர்கள் மனதளவில் உடைந்திருப்பார்கள். அவர்களுக்கு மனதளவில் ஆதரவு தேவையானதாக இருக்கும். இந்த மாதிரியான ஆட்கள் தான் Hypnosisக்கு ஆட்படுவார்கள். அந்த மாதிரியானவர்களை தான் சாமியார்கள் குறி வைப்பார்கள். இப்படிப்பட்டவர்களின் இலகுவாக மயங்கும் குணத்தை சாமியார்கள் சரியாகப் பயன்படுத்திக்கொள்கிறார்கள்.

நெற்றிக்கண் என இந்த சாமியார்கள் சொல்லிக் கொள்ளும் Pineal gland என்பது நமது முன் மூளையில் இருக்ககூடிய ஒரு சிறு சுரப்பி, இதனை நெற்றிக்கண் என்று சொல்வதற்கு எந்தவொரு ஆதாரமும் இல்லை. ஒரு இட்டுக்கட்டிய கதை போல இதுவும் மக்கள் காலம்காலமாக சொல்லிக்கொண்டு வரும் விடயமாக இருக்கிறது, அவ்வளவு தான். இதற்கு விஞ்ஞான ரீதியாக எந்தவொரு ஆதாரமும் இல்லை. Pineal gland மெலேடோனின் (Melatonin) என்கிற ஹோர்மோனை சுரக்கிறது. சூரியன் மறையும் போது துங்குவதற்கும் சூரியன் உதிக்கும் போது விழித்தெழுவதற்குமான ஹோர்மோன் இது.

தியானம் செய்யும் போதும் pineal gland தூண்டப்படுகிறது என்பதற்கான எந்த ஆதாரமும் இல்லை.

தியானம் செய்யும் போது சிலவிடயங்களை நாம் உற்று சிந்தித்துக்கொண்டிருப்போம். அதாவது பிரச்சினைகள் நம்மை சூழ்ந்து இருப்பின் நிதானமாக ஆராய முடியாதல்லவா. ஆனால் தியானத்தின் போது அவ்வாறான பிரச்சினைகள் குறித்து நாம் வழக்கத்திற்கு மாறாக கூர்மையாக சிந்திக்கும் போது நமக்கு ஒரு தெளிவு கிடைக்கிறது. எந்தவொரு சாதாரண மனிதனால் மேற்கொள்ளும் தியானத்தின் மூலமும் இந்த தீர்வு கிடைக்கலாம். இதற்கு நாம் சாமியாரை ஒன்றும் அணுகத் தேவையே இல்லை.

பொதுவாக நமது மூளையைப் பொறுத்த வரை உணர்வுகளை கட்டுப்படுத்தக்கூடிய இடத்தின் பெயர் Temporal lobe. இது இடது மற்றும் வலது மூளைகளின் பக்கவாட்டில் உள்ளது. உதரணமாக தியானத்தின் போதோ அல்லது உணர்வுபூர்வமான பேச்சின் போதோ, திரைப்படங்களை காணும் போதோ நமக்கு கண்ணீர் வருகின்றது என்றால் இந்த Temporal lobe இன் தூண்டுதலால் தான். இதற்கும் பீனியல் கிளான்டுக்கும் சம்பந்தம் இல்லை. இந்த Temporal lobe இருந்து தான் மத- ஆன்மிக உணர்வு, ஆன்மிக உணர்வு இல்லாதவங்களுக்கு இயற்கை மீதான நம்பிக்கை அல்லது ஏதோவொரு சக்தியுள்ளது என்பதை நம்பக்கூடிய உணர்வு உருவாகிறது. இந்த உணர்வுகளை தூண்டகூடிய வேலையையும் இந்த Temporal lobe தான் செய்கிறது.

இன்னும் விளக்கமாகச் சொல்லப் போனால் Temporal lobe இல் சிலபேருக்கு வலிப்பு ஏற்படலாம். எங்களுக்குத் தெரிந்த வலிப்பு என்பது கை- கால்கள் துடிப்பது அல்லவா? வலிப்பு என்பது மூளையின் எந்த பகுதியிலும் வரக்கூடியது தான். பொதுவாக Temporal lobe இல் வலிப்பு வந்தது எனில் சில பேருக்கு இந்த மாதிரியான எண்ணங்கள் அதிகமாகும் அதாவது கடவுளை நேரில் பார்த்தைப்போலவோ கடவுள் தன்னிடம் பேசியது போலவோ பேசுவார்கள். இந்தப் பகுதியில் அடிக்கடி வலிப்பு வருபவர்களுக்கு அவர்களுக்கென்ற பிரத்யேக குணாதிசயங்கள் உள்ளன. அதில் ஒன்று மிக அதிகமான ஆன்மிக உணர்வு, ஏதாவது எழுதிக்கொண்டோ அல்லது வரைந்து கொண்டே இருப்பார்கள். தாம் பத்திய வாழ்வில் நாட்டமிருக்காது. அது மட்டுமின்றி பேச ஆரம்பித்தால் நிறுத்தவே மாட்டார்கள். அதாவது அவர்களின் பேச்சு ஒரு வழுவழுத்த இழுவையான பேச்சாக இருக்கும்.

Unlearning processing என்று சாமியார்கள் சொல்வதையும் கேள்விப்பட்டிருக்கிறோம் அதற்கான காரணம், அப்படி இருந்தால் நீங்கள் தானாக சிந்தித்து கேள்வி கேட்கும் திறனற்றவராக இருப்பீர்கள். தகவல்கள் மலிவாக்க கிடைக்கும் இந்த காலத்தில், ஏற்கனவே நாம் கற்றவைகளை பகுத்தறிவு விடயங்களை எல்லாம் களைந்து விட்டு துடைத்தெறிந்து விட்டு அந்த சாமியார் சொல்வதை மட்டும் கேட்டு முட்டாள்களாக மாறி தலையாட்ட வேண்டுமாம், அதற்குத் தான் அந்த 'unlearning process' பித்தலாட்டம் எல்லாம்!

# பெற்றோர் சொல்வதைக் கேட்காதீர்கள் அசைவ உணவுகளை உண்ணலாம்!

## பரம்பொருள் விஷ்ணுவின் போதனைகள்

**பரம்பொருள் அறக்கட்டளையின் நிறுவுநர் மகாவிஷ்ணு ஆஸ்திரேலியாவுக்கான பயணத்தை அண்மையில் மேற்கொண்டிருந்தார். மகாவிஷ்ணு தனியார் தொலைக்காட்சியில் காமடியனாக அறிமுகமாகி சினிமாவில் காலடியெடுத்து வைத்தவர். அங்கும் தோல்வியுற்ற நிலையில் ஆன்மிகத்தை கையிலெடுத்து சொற்பொழிவு மூலம் தனது திறமையை சமூக வலைத்தளங்கள் ஊடாக பிரபலபடுத்திக் கொண்டவர். கடந்த வருடம் பாடசாலை ஒன்றில் மாணவர்களுக்கு மத்தியில் உரையாற்றும் போது மாற்றுத்திறனாளிகள் குறித்து மூடநம்பிக்கையை பரப்பிய குற்றத்துக்காக அவர் சிறை சென்றிருந்தார். அவர்மீது வழக்குத் தொடுக்கப்பட்ட வேளை அவர் ஆஸ்திரேலியாவில் தனது கிளையை உருவாக்குவதற்காக வந்திருந்தார். இந்தியாவில் தொடரப்பட்ட வழக்கைத் தொடர்ந்து அவர் அவசரமாக இந்தியா சென்றிருந்தார். அதன் பின்னர் அவர் கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டிருந்தார். இதன் பின்னர் இம்மாத முற்பகுதியில் அவர் ஆஸ்திரேலியா வந்திருந்தார். அவரிடம் எதிரொலி சார்பாக மேற்கொண்ட நேர்காணல் இங்கு பிரசுரமாகின்றது.**

**நேர்கண்டவர்: ஜே ஜே**

**கேள்வி: நீங்கள் யார்? கடவுளா? சாமியாரா..?**

பதில்: இல்லை. நான் ஒரு பிச்சைக்காரன்.

**கேள்வி: மக்கள் மத்தியில் எப்படி பிச்சைக்காரனால் முன்னுதாரணமாக இருக்க முடியும்..?**

பதில்: இந்த உலகத்தில் அனைவரும் பிச்சைக்காரர்கள் தான். பஞ்சபூதங்களின் சப்போர்ட் இல்லாமல் யாருக்கும் எதுவும் கிடைக்காது. ஆகையால் மனிதன் எனப்படுகின்ற சாதாரண பிறவி, இறை என்கின்ற பேரொளியிடமிருந்து தினமும் பிச்சை வாங்கிக்கொண்டே இருக்கிறான். அதை நான் உணர்ந்துள்ளேன். அதனால் நான் பிச்சைக்காரன் என்று ஏற்றுக்கொண்டேன். பலர் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை என நினைக்கின்றேன்.

**கேள்வி: ஏன் ஆஸ்திரேலியாவுக்கு வந்தீர்கள்..?**

பதில்: நல்ல நாடுதானே. உங்கள் நாட்டுக்கு வந்திருக்கிறேன். ஏன் வந்தீர்கள் என்று கேட்கிறீர்களே?

**கேள்வி: நீங்கள் இங்கு சுற்றுலாவுக்கு வரவில்லைத்தானே..?**

பதில்: மொத்தவாழ்க்கையும் சுற்றுலாதான். பிறப்பு முதல் இறப்பு வரை சுற்றுலாதான். எத்தனையோ நாடுகளுக்கு போக வேண்டும் என்று நினைத்தாலும் இறைவன் சில நாடுகளுக்கு தானே விசா கொடுக்கிறார். இறைவன் ஏதோவொரு காரணத்துக்காகத்தான் என்னை இங்கு வர வைத்திருக்கிறார் என்று நினைக்கிறேன்.

**கேள்வி: உங்கள் வருகைக்கு முதல் அம்மா பகவான் - நித்தியானந்தா மேலும் பலருடைய கிளைகள் உள்ளன. அவர்களைப் போலவா நீங்களும்..?**

பதில் : அவர்களைப்போல என்ற வார்த்தையை பயன்படுத்தாதீர்கள். அவர்களைப்பற்றி கேட்காதீர்கள். என்னைப் பற்றிக் கேளுங்கள். எனக்குத் தெரிந்த விடயங்களைப் பகிர்ந்து கொள்ளவே வந்துள்ளேன். முடிந்தளவு ஞானத்தை மக்களிடம் கொண்டுபோய்ச் சேர்ப்பதற்காக வந்துள்ளேன்.



**கேள்வி: நித்தியானந்தவும் சிறு கூலித் தொழிலைச் செய்து வந்தவர் என்றே சொல்லியுள்ளார். அதைப்போலவே நீங்களும் அவ்வாறு பிச்சைக்காரன் என்கிறீர்களே ..?**

பதில்: உண்மையை உணர்ந்தவன் எல்லோரும் அதைத்தான் சொல்லுவார்கள்.

நான் ஒன்றும் இல்லை என்று உணர்வதற்கே இந்த மொத்த வாழ்க்கையுமே. பரஞ்சோதி பாபா என்று ஒருவர் வடபழனியில் இருந்தார். அவர் சினிமாத்துறையில் வேலைசெய்து கொண்டிருந்தார். திடீரென அவருக்கு ஏற்பட்ட உணர்வு அவரை ஆன்மிகத்துக்கு கொண்டுபோய் சேர்த்து விட்டது. ஆன்மிகத்தில் நிறைய வகைகள் உள்ளன. ஆன்மிகம் என்பது இப்படித்தான் போக வேண்டும் என்ற வரையறை இல்லை. அவரவர் புரிதலுக்கு அவரவர் அனுபவங்களுக்கு தகுந்தாற் போல அவரவர் ஞானத்தை உலகமெங்கும் கொண்டுபோய்ச் சேர்க்கிறார்கள். ஓசோவை செக்ஸ் சாமியார் என்றீர்கள். இன்று ஓசோவைப் போல சிறந்த மகானை பார்க்கவே முடியலை என்கிறீர்கள். ஓசோ தந்திரா என்றார் அதனைத்தான் திருமூலர் பரியேந்திரயோகம் என்கிறார். எமது அறிவு நிலைக்கு புரியவில்லை என்கிறார். போகப் போக புரியும். ஆயிரத்தில் ஒருவன் படத்தை யாருமே முதலில் கொண்டாடவில்லை: இன்றைக்கு ஆயிரத்தில் ஒருவன் போல சிறந்த படமே இல்லை என்கிறார்கள். உண்மையை உணர்ந்தவன் உயர்ந்த வைபிரேசனில் இருப்பான். குறைந்த வைபிரேசனில் இருப்பவர்களுக்கு கருத்துகளை தத்துவங்களை கொண்டுபோய்ச் சேர்க்க வேண்டும் என்று நினைக்கிறேன். இங்கு பிரச்சினை என்னவென்றால் எல்லோருக்கும் அவை புரிவது இல்லை. காலம் வரும்போது தானாகப் புரிந்துவிடும்.

**கேள்வி: நீங்கள் அசைவ உணவைத் தவிர்க்கச் சொல்கிறீர்கள். மிருகங்களை வதைக்காதீர்கள் என்கிறீர்கள். ஆனால் மிருகங்களிடமிருந்து கிடைக்கும் அனைத்து உணவுகளையும் தவிர்ப்பதன் ஊடாக மிருகங்கள் வதைபடுவதை தவிர்க்கலாம் தானே. வீகன் போன்ற உணவு முறைக்கு நீங்கள் ஏன் ஆதரவளிக்கவில்லை.**

பதில்: நான் ஏன் அப்படிச் செய்ய வேண்டும். பால் இன்று உலகசந்தைப் பொருளாகிவிட்டது. இன்று அது குறித்துப் பேசினால் பொருளாதார அச்சுறுத்தலாகிவிடும். பால் மனிதனுக்கான உணவே கிடையாது. தாய்ப்பால் மட்டுமே மனிதனுக்கான உணவு. பாலை செரிமானம் செய்யக் கூடிய சக்தி குழந்தைப் பருவத்திலேயே முடிந்துவிட்டது. 5 வயதுக்கு மேல் பால் செரிமானமடையாது. உடனே நீங்கள் கேட்கலாம். பால், மோர் என்று. அது வேறு.

வீகனை நான் ஆதரிக்கவில்லை. நான் என்னசொல்லுகிறேன் என்றால் மிருகங்கள் வதைபடுவதை பார்த்து கவலையடையவில்லை எனில் அது ஜீவகாருண்யம் இல்லை. பால் அவசியமில்லை என்றால் விட்டுவிடுங்கள்.

நான் உங்களுக்கு ஒன்று சொல்லுகிறேன். சுமார் இரண்டு அல்லது இரண்டரை ஆண்டுகளாக அசைவ உணவுகளைத் தவிர்த்து வந்தேன். ஒரு நாள் எனக்கு அசைவ உணவு சாப்பிட வேண்டும் என்ற ஆசை வந்தது. போய்ச் சாப்பிட்டு விட்டேன். இப்போது என்ன கடவுள் என்னை விட்டு போய்விட்டாரா.?

கிறிஸ்தவர்கள் - இஸ்லாத்தில் அனைவரும் அசைவ உணவையே சாப்பிடுகிறார்கள். அவர்களில் எவருக்கும் முக்தி கிடைக்காதா..?

நன்றாகப் புரிந்து கொள்ளுங்கள் நான் அசைவ உணவை சாப்பிடுங்கள் என்று வலியுறுத்தவில்லை. வள்ளல் பெருமான் ஜீவகாருண்யத்தை போதித்தார். அன்றைய காலத்தில் அவரிடம் யாரும் போகவில்லை. அசைவ உணவைச் சாப்பிடாதீர்கள் என்று சொன்னார். அவருடைய கல்லா கட்டவே இல்லை.

அசைவ உணவைச் சாப்பிடாதீர்கள் என்று சொன்னால் யாருமே ஆன்மிகப்பக்கமே வரமாட்டார்கள். அதனால் நான் என்ன சொல்கிறேன் எனில் பிடித்தவர்கள் சைவ உணவைச் சாப்பிடுங்கள், பிடிக்காதவர்கள் அசைவ உணவைச் சாப்பிடுங்கள். பரம்பொருள் யோகம் பண்ணுங்கள். பயிற்சி செய்யுங்கள். உங்களுக்கே புரியும். கொங்கன சித்தர் பறைவைகள் மற்றும் மிருகங்களின் பாகங்களை மருத்துவத்துக்குப் பயன்படுத்த சொல்லியுள்ளார். அதனால் அவர் பிழையானவரா?

உங்களுக்கு ஒரு உதாரணம் சொல்கிறேன். ஒருவருக்கு ஓசோவைப் பிடிக்கும் சத்குருவைப் பிடிக்கிறது, ஒரு சிலருக்கு ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கரைப் பிடிகிறது, சிலருக்கு சிவானந்த பரமஹம்சரை, வள்ளல் பெருமானை, அகத்தியரைப் பிடிக்கிறது. பல மகான்கள் பல உருவங்களில் வருகின்றனர். இறைவன்தான் பல உருவங்களில் வந்து பலவிதமாகப் புரிய வைக்கிறார். மக்களுக்கு ஏற்ற மொழியில் புரிய வைக்கிறார்.

இறைவனே வருகிறார் உபதேசம் செய்கிறார். கோபப்படுகிறார். திரும்பிப் போய்விடுகிறார். பின்னர் அவரே புரிந்துகொள்கிறார். தான் தப்பு பண்ணிவிட்டேன் என்று பின்னர் அவர் மீண்டும் வருகிறார். மீண்டும் உபதேசம் செய்கிறார். இதிலிருந்து என்ன புரிகிறது உங்களுக்கு ..? பிள்ளையையும் கிள்ளி விட்டு தொட்டிலையும் ஆட்டிவிட்டு எல்லாத்தையும் பண்ணிவிட்டு சிரிப்பவனும் அவனே.

**கேள்வி: வள்ளலார் அசைவ உணவைத் தவிர்க்கச் சொன்னதால்தான், வள்ளலாருக்கு கல்லாக் கட்டவில்லை என்று குறிப்பிட்டிருந்தீர்கள்..? உங்களுக்கு கல்லா கட்டாது என்பதால்தான் உங்கள் இஷ்டத்திற்கு சாப்பிடுங்கள் என்று சொல்லுகிறீர்களா..?**

பதில் : தற்போது உள்ள மனிதர்களுக்கு கசப்பான உண்மை தேவைப்படுவதில்லை. இனிப்பான பொய்தான் தேவைப்படுகிறது. மக்களுக்கு நல்ல கருத்துகளை கொண்டுபோய்ச் சேர்க்க வேண்டும் என்று எண்ணுகின்றேன். நான் வள்ளலாரை மட்டும் பின்தொடரவில்லை. வள்ளலாரையும் சேர்த்து பலரையும் பின்பற்றுகிறேன். நான் கொள்கைச் சித்தாந்தத்துக்குள் கட்டுப்படவில்லை. அதைக் கொண்டிருக்கவும் இல்லை. நான் பலபேரைச் சேரவேண்டும் என்று நினைக்கின்றேன். எனக்கு வள்ளலார் வேண்டாம், அகத்தியர் வேண்டாம், எனக்கு தற்போது தேவை என்னவென்றால் இந்த உயிரை தேற்றி எப்படி அடுத்த கட்டத்துக்கொண்டு செல்ல வேண்டும் என்பதே. ஒரு சில உயிர்கள் அசைவம் சாப்பிடுகின்றனவா? சாப்பிடு என்று சொல்வேன். அவர்களுக்கு என் உபதேசத்தை கொடுத்துக்கொடுத்தே என் வழிக்கு கொண்டு வந்துவிடுவேன். அவ்வாறானவர்களை வழிக்கு கொண்டு வர காலம் தேவைப்படுகிறது.

(14ஆம் பக்கம் பார்க்க)

# நாம் ஏன் அழவேண்டும்?

என் வீட்டுக்கு அருகில் இருக்கும் நூலகத்தில் எடுத்து ஒரு நூலைப் படித்ததன் விளைவுதான், இந்தக் கட்டுரைக்கு இப்படி ஒரு தலைப்பை வைக்கத் தோன்றியது. அந்த நூலின் பெயர், "நாம் ஏன் அழுகிறோம்?".

நாம் ஏன் அழுகிறோம் என்கிற காரணத்தை அறிவியல் ரீதியாகப் பார்க்கும் நூல்தான் மேட் ரெய்லி எழுதி இருக்கும் இந்தப் புத்தகம். நாம் ஒவ்வொருவரும் ஏன் தாராளமாக அழலாம் என்கிற புரிதல் இந்த நூலைப் படித்த பிறகு நமக்கு ஏற்படலாம் என நினைக்கிறேன்.

அழுகை என்பது பலருக்கும் ஒருவித மன அழுத்தத்தையும், சிலருக்கு வெட்கத்தையும் ஏற்படுத்தும் செயலாக இருக்கலாம். ஆனால் உண்மையில், அழுகை என்பது மனிதனுக்கே உரித்தான, ஆழமான உயிரியல் மற்றும் உளவியல் செயல்முறையாகும். இந்த நூலின் ஆசிரியர் மேட் ரெய்லி, கண்ணீர் என்பது வெறும் நீர் அல்ல - அது நம்மை நிம்மதியாக்கும் ஒரு இயற்கை மருந்து என்கிறார்.


**மூன்று விதமான கண்ணீர்:**

நம் கண்ணில் இருந்து வரும் கண்ணீர் மூன்று வகைப்படும். அவை,

*1. பாசல் கண்ணீர் (Basal Tears):*

இவை கண்களை ஈரமாக வைத்துக் காக்கும் வழக்கமான கண்ணீர். கண்கள் காய்வதைத் தடுக்கும் முக்கியமான பாதுகாப்பு உப்பு கலந்த திரவம். தமிழில் இதை, நம் கண்ணில் இருக்கும் அடித்தள (basement) கண்ணீர் எனலாம். இதற்கு உரித்தான கலைச்சொல் ஏதேனும் உள்ளதா என்பதை அந்தத் துறை வல்லுநர்கள் தான் தெரிவிக்க வேண்டும்.

*2. ரிப்ளெக்ஸ் கண்ணீர் (Reflex Tears):*



பொன்ராஜ் தங்கமணி

இது தூசி, வெங்காயம், புகை போன்ற வெளிப்புற தூண்டுதல்களுக்கு, எதிராக கண்கள் தானாக உற்பத்தி செய்யும் கண்ணீர்.

இது கண்களைச் சுத்தமாக்கும் செயற்பாடு. ஒரு செயலுக்கு பிரதிபலிப்பாக ஏற்படுவதால், இதைத் தமிழில் அனிச்சைக் கண்ணீர் எனலாம். யானையின் கண்களில் தெரியும் கண்ணீர் இந்த வகையைச் சார்ந்தது.

*3. உணர்ச்சிக் கண்ணீர் (Emotional Tears):*


இது தான் நம் உணர்ச்சிகளோடு தொடர்புடைய கண்ணீர். சோகத்திலும், மகிழ்ச்சியிலும், எரிச்சலிலும், ஆச்சரியத்திலும் ஏற்படக்கூடியது இந்தக் கண்ணீர். இது உயிரியல் ரீதியாகவும், உளவியல் ரீதியாகவும் மிக முக்கியமானது. மற்ற இரண்டு கண்ணீர் வகைகளையும் இயல்பாக பார்க்கும் மனிதர்கள், இந்த விதமான உணர்ச்சிக் கண்ணீரை, கலாசாரம், பண்பாடு, ஆண்-பெண் எனப் பலவகை பரிணாமங்களுடன் அணுகும் தன்மை உலகெங்கும் உள்ளது.

உணர்ச்சிக் கண்ணீர் பெரும்பாலும் மனிதர்களுக்கு மட்டுமே உரித்தானது எனலாம். பறவைகள் மற்றும் விலங்குகள் தினந்தோறும் சோகத்தைச் சந்தித்தாலும், அவை உணர்ச்சிகளை கண்ணீர் மூலம் வெளிப்படுத்துவதில்லை.


**உணர்ச்சிக் கண்ணீர் - மனதுக்கும் உடலுக்கும் ஒரு நிவாரணம்**

உணர்ச்சிக் கண்ணீர் என்பது நம்முடைய ஒடுக்கப்பட்ட உணர்வுகளை வெளிக்கொணர உதவுகிறது என்கிறார் இந் நூலின் ஆசிரியர். நம்மில் உள்ள தேவை இல்லாத உணர்ச்சிகளை வெளியேற்றும் ஒரு செயற்பாடுதான் கண்ணீர் விடுதல் என்கிறார். இதை ஆங்கிலத்தில் emotional detox எனலாம்.

(14ஆம் பக்கம் பார்க்க)





# தியானத்தின் ஊடாக நடைபெறும் மாற்றம் என்ன..?



கௌளரிகரன் உளவியல் ஆலோசகர்

**தியானம் மற்றும் அதன் ஊடாக நடைபெறும் மாற்றங்கள் தொடர்பாக உளவியல் ஆலோசகர் கௌளரிகரன் தனபாலசிங்கம் தரும் தகவல்களை இங்கு பகிர்கின்றோம்.**



மேலைத்தேய நாடுகளில் மனஅமைதிக்கான தியானங்களை மேற்கொள்வர். எங்களை போன்ற உளவியல் ஆலோசகர்களும் அதனையே சொல்லிக்கொடுப்பார்கள்.

ஆனால் யோக -சித்த பரம்பரைகளில் இருந்து வந்தவர்கள் ஆன்மாவை அறிந்து கொள்வதே அவர்களின் நோக்கமாக இருக்கும். சிலர் சொந்த முயற்சியில் இறங்குவார்கள். மற்றும் சிலர் ஆன்மிக ரீதியில் இறங்குவார்கள்.

தியானத்தின் அதிஉச்ச நிலைக்குப் போகும்போது அழுவது அல்லது உடலாட்டம் போன்றவை ஏற்படுவதற்கு pineal gland இலிருந்து சுரக்கப்படும் ஹப்பி ஹோமன் தான் காரணம். இது ஒரு விதமான பரவசமான நிலைக்குள் தள்ளுகிறது. நானும் தியானத்தை தொடர்ந்து செய்துவருபவன் என்ற ரீதியில் எனக்கும் இது நடந்திருக்கிறது.

தியானத்தின் ஆழ் நிலைக்கு போகும் போது எங்களை நாங்கள் அறிவதற்குரிய நிலைக்கு இட்டுச்செல்லும். நெற்றிக்கண்ணை நோக்கி தியானமிருக்கும் போது pineal gland இலிருந்து சுரக்கும் அதிகளவான ஹோமன்களால் நாம் ஒரு ஆழ்ந்த நிலைக்குள் செல்லுகின்றோம். எமது வாழ்க்கை குறித்த புரிந்துணர்வு சாதரணமான மக்களின் வாழ்க்கையை விட வித்தியாசமான புரிந்துணர்வு ஏற்படும். ஹப்பி ஹோமோன்களின் தூண்டல்களின் ஊடாக அதீத சுரப்புகளால் ஒரு மனிதனுக்குக் கிடைக்கும் மதுபோதையால் ஏற்படும் ஆனந்தத்தை விட அதிக புரிந்துணர்வு மற்றும் விழிப்புணர்வுடன் கூடிய பரவச நிலையில் இருப்போம்.

இது ஒரு மூட நம்பிக்கை சார்ந்த விடயமா அல்லது அறிவியல் சார்ந்த விடயமா என்ற கேள்வி எழலாம். இந்தத் தியானத்தின் உச்சக்கட்டத்துக்கு செல்லும் போது இந்த உலகம் ஒரு மாயை என்ற எண்ணத்துக்குள் சென்றுவிடுவார்கள். அப்படி ஆழமாகச் செல்வதற்கு பலர் விரும்புவதில்லை. ஆழமாக செல்வதற்கான பயிற்சிகள் பல யோக நிலையங்களில நடைபெறுகின்றன. இவற்றை எனது தனிப்பட்ட வாழ்க்கையில் இருந்தே சொல்கிறேன்.

மன அழுத்தம், பதற்றம், பயங்கள், நித்திரையின்மை போன்றவற்றுக்கான தீர்வாக இந்தத் தியானம் அமைகின்றதாகக் கண்டுபிடித்துள்ளனர்.

# பெற்றோர் சொல்வதைக் கேட்காதீர்கள்

(13ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவர்களை வழிக்கு கொண்டு வர முன்னரே எல்லைக் கோட்டைப் போட்டுவிட்டால் வரமாட்டார்கள். என்னுடைய தனிப்பட்ட எண்ணம் என்னவென்றால் அதிகளவான மக்களை உள்ளே கொண்டுவரவேண்டும்: அதுவே என் குறிக்கோள். முன்னர் நானுமே சொன்னேன் அசைவம் சாப்பிட வேண்டாம் என்று. கூட்டமே வரவில்லை.

நன்றாகப் புரிந்து கொள்ளுங்கள் நான் சைவம் மட்டுமே உண்பவன். கடிவாளத்தை போட்டால் யாருமே வருகிறார்கள் இல்லை. அதனால் போகிற போக்கில போய்கொண்டிருக்கிறேன். புரிகிறதா உங்களுக்கு?

**கேள்வி: நீங்கள் சினிமாத்துறையில் இருந்தீர்கள் . பிரபலமாக வேண்டும் என்ற எண்ணம் உள்ளவர்தானே நீங்கள்?**

பதில்: பிரபலமாக வேண்டும் என்பதற்காகவே நான் சினிமாவுக்கு வந்தேன்.

**கேள்வி: ஆனால் நீங்கள் சினிமாவில் வெற்றி பெறவில்லை அல்லவா..?**

பதில்: வெற்றி என்று எதைக் குறிப்பிடுகிறீர்கள்.?

**கேள்வி: மக்கள் ஆதரவே. அது உங்களுக்கு கிடைக்கவில்லையே?**

பதில்: இல்லை என்று சொல்லுகிறேன். ஆனாலும் பதில் சொல்கிறேன். தோற்றவனுக்கும் வரலாறு உண்டு ஜெயித்தவனுக்கும் வரலாறு உண்டு. வரலாற்றில் விமர்சனம் செய்பவனுக்கும் கேலி செய்பவனுக்கும் ஒரு வரி கூட கிடையாது. நான் உண்மையான வெற்றி எது என்று நினைக்கின்றேன் எனில் தன்னை உணர்வதைத்தான் வெற்றியாக நினைக்கிறேன். தன்னை அறிதல் என்பதே வெற்றியாகும். அதனை இறைவன் எனக்கு எற்படுத்திக் கொடுத்திருக்கிறார். எனது கருத்துப்படி நான் வெற்றி பெற்றுவிட்டேன். ஆனால் உங்களுடைய பார்வையில் அதாவது சாதாரண மனித வாழ்வியல் கேள்விக்கு எனது பதில் ஆமாம் நான் தோற்றுவிட்டேன். ஆன்மிகம் சார்ந்த பதிலாகவேண்டும் எனில் நான் வென்றுவிட்டேன்.

**கேள்வி: சினிமாவில் பிரபல்யமடையவில்லை என்பதால் தான் ஆன்மிகத்தை தேர்வு செய்தீர்களா..?**

பதில்: தேர்ந்தெடுத்தல் என்ற வார்த்தையை மாற்றிவிடுங்கள். நான் தேர்ந்தெடுக்கவில்லை. தேர்ந்தெடுக்கப்பட்டேன். எனக்கும் ஆன்மிகத்துக்கும் சம்பந்தமே இல்லை. அது எனக்கு பிடிக்கவே பிடிக்காத விடயம். கடவுள் மீது நம்பிக்கையற்ற வன். என்னை மாற்றி தலையில் ஓங்கிக் கொட்டி இதுதான் வாழ்க்கை என்று உட்கார வைத்துவிட்டார் கடவுள். அந்தப் புரிதல் வந்த பின்னர் இந்தப் பயணம் தொடர்கிறது.

**கேள்வி: ஆன்மிக வாழ்க்கையில் அதிகமாக வயோதி பர்களையே காணமுடிகிறது. ஆனால் இளையவர்கள் வருவது அரிதாகவே உள்ளது. அதுமட்டுமின்றி அவ்வாறு இளையவர்கள் வருவதால் பெற்றோர் மனவுளைச்சல் அடைகிறார்களே..?**

பதில்: பெற்றோர் குறைந்தளவிலான ஆன்மிக அறிவாற்றல் கொண்டவர்கள். அவர்கள் பத்துப்பேர் பேசுவதை வைத்துதான் பேசுவார்களே தவிர சுயமாக சிந்தித்துப் பேசக்கூடியவர்கள் அல்லர். பெற்றோரின் அறிவுறுத்தல்களுக்கு உட்படாமல் ஆன்மிகத்தில் அதிகூடிய சிந்தனையோடு இருந்தால் எல்லாவற்றையும் மாற்றிவிடுவீர்கள். எந்த சக்தி அதிகமாக உள்ளதோ அதுவே வெல்லும். என்னுடைய வீட்டில் என் பேச்சை யாருமே கேட்கவில்லை. ஐந்தாறு வருடங்கள் என் பேச்சை யாருமே கேட்கவில்லை. தற்போது என் பையனைப் போல யாருமே இல்லை என்கிறார்கள்.

யார் விமர்சனம் செய்தாலும் கண்டுகொள்ளாதீர்கள். உங்களுக்கு இறைவன் தான் வேண்டும். இவர்கள் அனைவரும் உங்களை விட்டு அகன்று விடுவார்கள். தவறான விமர்சனத்தை கண்டுகொள்ளாதவன் 95 வீதம் வென்றுவிட்டான். சரியான விமர்சனத்தை சுயபரிசோதனை செய்து கொண்டவன் 100 வீதம் வென்று விட்டான். ஆகமொத்தம் விமர்சனம் இல்லாமல் உங்களை மாற்றிக்கொள்ளவே முடியாது. அது வீடாக இருந்தாலும் சரி, சமூகமாக இருந்தாலும் சரி.

**கேள்வி: உங்களுடைய ஒரு வீடியோ பதிவொன்றில் கணவன் -மனைவிக்கிடையே நம்பிக்கையாக இருக்காதீர்கள் என்று கூறியிருந்தீர்கள். பின்னர் மீண்டும் வந்து பிறப்பெடுப்பீர்கள் என்றும் நம்பிக்கையை சித்தர்கள் மீது வையுங்கள் என்றும் கூறியிருந்தீர்கள். சிவன் முதல் திருமால் வரை குடும்பங்களுடன் தானே வாழ்ந்து காட்டியுள்ளார்கள்..?**

பதில்: இந்த உலகத்திலேயே அனைவரும் இறையம்சம். நீங்கள் முதலில் கண்கண்ட கணவர் என்று இருப்பீர்களா? பிறகேன் இந்தக் கேள்வி. மகாவிஷ்ணுவை இடறுப்பட வைப்பதைப்போல கேள்வி கேட்கக் கூடாது. மகாவிஷ்ணு ஆயிரம் இரண்டாயிரம் பதிலைக்கூட கொடுப்பார்.(கோபத்தின் உச்சிக்கு சென்ற பின்னர் தன்னை சுயநினைவுக்கு கொண்டுவந்த பின்னர் பதிலளித்தார்)

கணவனே கண்கண்ட தெய்வமாக இருங்கள். ஆனால் அப்படி இருந்தால் ஆதிக்கத் தன்மை அதிகமாகிறது. அப்படி என்றால் என்ன செய்வது? அந்தக் காலத்தில் சக்தி சிவனைவிட ஆற்றல் பெற்றிருந்தார். ஆனால் சக்தி ,சிவனுக்கு அடங்கிப் போயிருந்தார். இன்றைய காலத்தில அப்படியல்ல. யார் பணம் சம்பாதிக்கிறார்களோ அவர்களே ஆதிக்கம் செலுத்து கிறார்கள். அப்படியிருக்கும் போது நான் எப்படி சமநிலைப் படுத்துவது..? அப்படி எனில் இந்த உலகத்துக்குத் தகுந்தால் போல தானே பேச வேண்டும். கலியுகத்துக்கேற்றால் போலதானே பேசவேண்டும்.

இது நவீன காலம். செவ்வாயில் வீடுகட்டுவதை பற்றி எலான் மாஸ்க் பேசிக்கொண்டிருக்கிறார். நவீனமாகப் பேசவேண்டும். அந்தக் காலத்துக் கணவர்கள் போல இந்தக் காலத்துக்கணவர்கள் இல்லை. அன்றிருந்த தர்மபத்தினிகள் போல இன்று இல்லை. நிறைய தர்ம பத்தினிகள் இருக்கிறார்கள் ஆனால் அதிகளவில் இல்லை என்றே பேசுகிறேன் விதிவிலக்கு களை பற்றி பேசவே இல்லை. யாரையும் தவறு என்றும் சொல்லவில்லை சரி என்றும் சொல்லவில்லை.

**கேள்வி: பெற்றோரின் அறிவுரைகளைப் பிள்ளைகள் கேட்கக்கூடாது என்கிறீர்களா..?**

பதில்: முழுவதுமாக ஏற்றுக்கொள்ளக் கூடாது. நல்லதை எடுத்துக்கொள்ளுங்கள் கெட்டதைத் தவிர்த்துக்கொள்ளுங்கள்.

**கேள்வி: தியானத்தின் ஊடாக நெற்றிக்கண்ணை அறிய முடியுமா? உங்களுக்கு திறந்துள்ளதா..?**

பதில்: திறந்துள்ளது என்று சொன்னால் எப்படி அறிந்து கொள்வீர்கள். இரகசியங்களை வெளியில் சொல்லக்கூடாது. இருக்கிறதா என்று கேளுங்கள் சொல்லுகிறேன். இருக்கிறது. எனக்கு திறந்துவிட்டதா என்றால் தெரியாது.

**கேள்வி: எந்த ஆதாரத்தின் அடிப்படையில் சொல்லு கிறீர்கள்..?**

புதில்: pineal gland is called your third eye. It is called as gods particle. Current science is proving it verry clearly that there is one god particle which is called as pineal gland also called as in depth soul particle. Harvard scientist proved it just two months ago.

**கேள்வி: கடந்த முறை ஆஸ்திரேலியா வந்து திடுதிப்பென திரும்பி விட்டீர்கள். உங்கள் மீது தொடரப்பட்ட வழக்குத் தான் அதற்குக் காரணம் என நினைக்கிறேன். நீங்களும் கைது செய்யப்பட்டிருந்தீர்கள். சாமியார்கள் மீது வழக்குகள் தொடரப்பட காரணம் என்ன.?**

பதில்: ஒரு காரணமும் இல்லை. வழக்குப் போடுவதாக இருந்தால் போடட்டும்.

**கேள்வி: அப்படித்தான் நித்தியானந்தா மீதும் வழக்கு போட்டுப்போட்டே கைலாசாக்கு அனுப்பி விட்டார்கள்..? அதைப்போல உங்களுக்கான கைலாசா தயாரா?**

பதில்: நித்தியானந்தாவை பற்றி எதுவுமே தெரியாது. அவரைப்பற்றி பேச நான் வரவில்லை. எனக்கு அப்படி எந்த எண்ணமும் இல்லை. ஒருவேளை கைலாசா உருவாக்கப்பட்டால் உங்களுக்குதான் முதல் விசா.

**கேள்வி: உங்கள் கைலாசா இந்தியாவுக்குள் இல்லை தானே..?**

பதில்: (நெற்றியை தொட்டுகாட்டியவாறு) உண்மையான கைலாசா உள்ளுக்குள் இருக்கிறது.

**கேள்வி: பொதுவாக சாமியார்கள் அரசியல்வாதிகளின் பினாமிகள் என்ற பேச்சிருக்கிறது. நீங்கள் எந்த அரசியல்வாதியின் பினாமி..?**

பதில்: நான் பினாமிதான். இறைவனின் பினாமி. பதில் கிடைத்ததா..?

**கேள்வி: இறைவன் என்கிறீர்களே. தப்பித்துக்கொள்வ தற்கான பதிலா..?**

பதில்: தப்பிப்பதற்காக அல்ல. உண்மையான பதில்.

**கேள்வி: கடந்த முறை ஆஸ்திரேலியாவுக்கு வந்த போது தியான சட்சங்கம் நடத்தியிருந்தீர்கள். அதில் கலந்து கொண்டவர்கள் பலர் அழுதவாறும் தங்களை மறந்து உடம்பை அசைத்தவாறும் காணப்பட்டனர். அவர்களில் நெற்றியில் வைத்து நீங்கள் அழுத்துவதையும் காண முடிந்தது. இதைப் போல பல கிறிஸ்தவ போதகர்களின் வழிபாட்டு நிகழ்வுகளிலும் நடைபெறுகிறது. உண்மையில் என்ன நடக்கிறது.?**

பதில்: கிறிஸ்தவத்துக்குள் நாம் போகவேண்டாம். அதைப் பற்றி எனக்குத் தெரியாது.

ஒவ்வொரு உடம்புக்குள்ளும் ஒரு ஆற்றல் தூங்கிக்கொண்டி ருக்கிறது. அது பேச பேச எல்லாம் புரியாது. அதனை உயிர்ப்பிப்பதற்கு சில யோகவழிகள் உள்ளன. அப்போது தன் சக்தியை தன்னால் அறிய முடிகிறது. அதன்பின்னர் நீங்களே என்ன செய்ய வேண்டும் என்பதை நான் சொல்லிக்கொடுத்துவிடுவேன். அதுதான் பரம்பொருள் யோகம்.

**கேள்வி: அந்தகாலத்து யோகிகள், சித்தர்கள் கண்டம் விட்டு கண்டம் பறந்தது கிடையாது. நவீனகால சாமியார்கள் மட்டும் பறந்து வருகிறார்களே..?**

பதில்: நவீன காலம் என்பதால் வருகிறார்கள்.அதுமட்டு மின்றி அந்தக்காலத்து யோகிகளும் யாருக்கும் தெரியாமல் இப்படி வந்திருப்பார்கள்.

**கேள்வி: ஆஸ்திரேலியாவாழ் மக்களுக்கு என்ன சேவை செய்ய வந்தீர்கள்..?**

பதில் : சேவை என்றால் ஒன்றே ஒன்றுதான், ஞானத்தைக் கொடுப்பது மட்டும் தான். அடுத்தது தானம். ஆஸ்திரேலியா வைப் பொறுத்தவரை தானம் கொடுப்பதற்கு வழியில்லை. ஞானம் என்றால் என்ன கற்றுக்கொண்டவற்றை மறப்பதற்குப் பெயர் ஞானம். கற்றுக்கொள்வதை மறப்பதற்கு பெயர் ஞானம். ஒட்டுமொத்த உலகமும் எப்படி கற்றுக்கொள்வதை மறக்க வேண்டும் என்று சொல்லிக்கொடுக்கிறேன். மறந்தால் வேறொன்று நடக்கும். அதனை அனுபவியுங்கள். அதுதான் ஞானம். அதற்காகவே வந்துள்ளேன்.

# நாம் ஏன் அழவேண்டும்?

(13ஆம் பக்கத் தொடர்ச்சி)

அறிவியல் ரீதியாக, உணர்ச்சி கண்ணீரில் வெளியேறும் போது, கோர்டிசால் (cortisol) போன்ற மன அழுத்த ஓர்மோன்கள் வெளியேறும். இதனால் நம் உடலில் ஒருவித அமைதி மற்றும் ஓய்வு கிடைக்கிறது.

அதுமட்டுமல்ல, அழுவதன் போது, மூளையில் இருந்து ஒக்சிடோசின் (Oxytocin) மற்றும் என்டார்பின்கள் (endorphins) போன்ற நன்மை தரும் இரசாயனங்கள் வெளியேறும். இவை நம்மை மனநிம்மதியுடன் உணரச் செய்கின்றன. அதனால் தான் சில நேரங்களில் அழுது முடித்த பிறகு நம்முடைய மனது சற்று இலகுவாக உணர்வதற்கு காரணம்.

**சமூகச் சிந்தனையும் தவறான நம்பிக்கைகளும்**

நமது சமூகத்திலும் கலாசாரத்திலும் மட்டுமல்ல, உலகின் பல்வேறு இனக்கூட்டத்திலும் நாடுகளிலும் அழுவது ஒரு பலவீனத்தின் அடையாளமாக பார்க்கப்படுகிறது. அதுவும், "ஆண் என்றாலே அழக் கூடாது", "தந்தையின் கண்ணீரைக் கண்டவர்கள் உண்டா?" என்பது போன்ற அதீத கற்பிதங்களை நம்மிடையே சொல்லாமல் விதைத்து, பலரை தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்த விடாமல் வைத்து, இதன் விளைவாக, மன அழுத்தம், உடல் நோய்கள், மனச்சோர்வு போன்றவை அதிகரிக்க நம் சமூகச் சூழலும் ஒருவித காரணம் ஆகின்றது.

இவ்வாறான மன இறுக்கத்தில் இருக்கும் பல்வேறு நபர்கள் வசமாக சிக்கிக் கொள்கிற இடமாக ஆன்மிகம் உள்ளது. கடவுள் நம்பிக்கை என்பது ஒரு உளவியல் தேவையாக பலருக்கும் உள்ளது. அந்தத் தேவையினைப் பற்றி நாம் இங்கு குறிப்பிடவில்லை. அந்தத் தேவை புரிந்து கொள்ளக் கூடியது.

ஆன்மிக குருக்களும் அவர்களின் திறமையும்:

இங்கே குறிப்பிடப்படும் ஆன்மிகம் என்பது ஆன்மிகக் குருக்களிடம் மக்கள் மாட்டிக் கொள்வதைப் பற்றியதாகும். தங்களைத் தாங்களே, "ஆன்மிகக் குரு" எனக் கூறிக்கொண்டு தங்கள் ஆதாயத்திற்காக, சாதாரண மனிதர்களை இந்த போலிக் குருமார்கள் பயன்படுத்திக்கொள்கிறார்கள்.

சாதாரண மனிதர்களிடம், பாவம், பழி, குற்றவுணர்வு போன்ற உணர்வுகளைத் தூண்டி, அழ வைத்து, அதைத் தங்களின் "தெய்வீகத் திறமை" என சாதுரியமாக விளம்பரம் செய்கிறார்கள். இந்தச் செயலில், படித்தவர்கள், படிக்காத வர்கள், பணக்காரர்கள், ஏழைகள் என அனைத்து விதமான மக்களும் எளிதில் ஏமாறுவதை கண்கூடாக நாம் காணலாம்.

இதில் மத வேறுபாடு இல்லாமல், இந்துக்கள், கிறிஸ்தவர் கள் என அனைவரும் எளிதில் மத போதகர்களிடம் ஏமாறுவது இந்தியா, இலங்கை மட்டுமின்றி இங்கு ஆஸ்திரேலியாவிலும் தொடர்கிறது.

ஒரு பக்கம், கிறித்தவ மத போதகர்கள் அமாவாசை ஜெபம், சங்கடகர சதூர்த்தி ஜெபம் என ஒரு வித மதக்கலவை மந்திரத்தை மனிதர்களை ஏமாற்ற, ஏவிக்கொண்டு இருக்கிறார்கள். மறுபுறம், இந்து மதத்தில், தன்னைத் தானே கடவுள் எனக் கூறி தியான வகுப்புகள், உள் பொறியியல் (inner engineering) எனப் பல்வேறு விதங்களில் ஏமாற்றும் கலைகளை புதிது புதிதாக கார்ப்ரேட் சாமியார்கள் உற்பத்தி செய்து கொண்டு இருக்கிறார்கள். இஸ்லாமிய மதத்தில் பல்வேறு மூடப் பழக்கங்கள் இருந்தாலும், மத குருமார்கள் விடயத்தில், ஒப்பீட்டளவில், இஸ்லாமியர்கள் அதிகம் ஏமாறுவதாகத் தெரியவில்லை. கடவுள் பெயரை வைத்து நடக்கும் இது போன்ற மதப் பிரசாரக் கூட்டத்திற்கு நல்ல கூட்டமும் வருகிறது என்பது, மனித சமூகம் இன்னும் விழிப்படையாமல் இருக்கிறது என்பதன் ஒரு அடையாளமே.

இவ்வாறான போலிக் குருமார்களிடம் தஞ்சம் அடைவது, அவர்களது பணம், சொத்து, நேரம் போன்றவற்றை இழப்பதற்கு தங்களைத் தாங்களே காவு கொடுப்பதற்கு சமம் என்பதைப் பலர் உணர்வதில்லை.

இவர்களின் போலித் தந்திரத்தை வெளிக்கொணரும் காணொளிகள் பல சமூக ஊடகங்களில் வந்தாலும், எப்பொழுதும் போல ஒரு புதுக் கூட்டம் இவர்களைத் தொடர்ந்து கொண்டு தான் இருக்கிறது.

அழுதல் மற்றும் அடிப்படை உணர்ச்சிகளின் அறிவியலை அறிந்து கொள்ளுதல், நமக்கு வாழ்வியலை புரிந்து கொள்ள வழிவகுக்கும். இந்தப் புரிதல், போலிப் போதகர்களிடம் சென்று ஏமாறாமல் இருக்க வழிவகை செய்யும்.

**உணர்வுகள் - அறிவியல் பார்வை:**

மனித உணர்வுகளையும் உணர்ச்சிகளையும் அறிவியல் கண்ணோட்டத்தோடு பார்த்துப் பழக சிறுவயதில் இருந்தே கற்றுக் கொள்ள வேண்டும். அழுவது என்பது யாரும் தவிர்க்க வேண்டிய செயலல்ல. உணர்வுகள் என்பது மனிதரின் உள்ளார்ந்த ஓர் அடையாளம். அவற்றை அடக்காமல், இயல்பாக நாம் இருந்து, அழுகை வரும்போது அழுதும், சிரிப்பு வரும்போது சிரித்தும், நம்முடைய உடல் நலத்தை, மனநலத்தை உறுதியாகவும் நலமாகவும் பேணி வாழ முடியும்.

அழுவதில் வெட்கமில்லை. அழுவதில் பலவீனமில்லை.

அழுவதில்தான் மனதின் சுதந்திரமும், நிம்மதியும் இருக்கின்றன. ■

# ‘உங்கள் வாக்கு கணக்கில் எடுக்கப்படச்செய்வது எப்படியென்று உங்களுக்குத் தெரியுமா’?

## ‘ஃபெடரல்’ தேர்தல், 3 மே 2025 சனிக்கிழமை

**சரியாக வாக்களிப்பது எப்படி என்பதை நீங்கள் புரிந்துகொள்வது முக்கியம்.**

தேர்தல் தினத்தன்று இரண்டு வாக்குச் சீட்டுகளை நீங்கள் நிரப்ப வேண்டும்:


- **பச்சை நிறத்திலான பிரதிநிதிகள் சபைக்கான ஒன்று**
- **பெரிய வெள்ளை நிறத்திலான ‘செனட்’-டிற்குரிய ஒன்று**

பச்சை நிற வாக்குச் சீட்டில் பிரதிநிதிகள் சபைக்கான உங்கள் உள்ளூர் அல்லது தொகுதிப் பிரதிநிதிக்கு நீங்கள் வாக்களிப்பீர்கள்.

வெள்ளை நிற வாக்குச் சீட்டில் ‘செனட்’ இற்கான உங்கள் மாநில அல்லது எல்லைப் பிரதேசப் பிரதிநிதிக்கு நீங்கள் வாக்களிப்பீர்கள்.


**நீங்கள் ஏதும் தவறு செய்துவிட்டால் கவலைப்பட வேண்டியதில்லை. இன்னொரு வாக்குச் சீட்டை கேட்டுப் பெற்று மீண்டும் நீங்கள் ஆரம்பிக்கலாம்.**

**பச்சை நிற வாக்குச் சீட்டு** – உங்கள் விருப்பு ஒழுங்கு வரிசைப்படி **ஒவ்வொரு** பெட்டியிலும் இலக்கமிடவும்.




மாதிரி வாக்குச் சீட்டு

**வெள்ளை நிற வாக்குச் சீட்டு** – கோட்டிற்கு மேலே அல்லது கீழே வாக்களிக்கும் தெரிவினை நீங்கள் மேற்கொள்ளலாம்.




மாதிரி வாக்குச் சீட்டு

## ‘ஒன்றில்’

**கோட்டிற்கு மேலே வாக்களித்தல்**

உங்கள் தெரிவின் ஒழுங்கு வரிசைப்படி, கட்சிகள் அல்லது குழுக்களுக்காக **குறைந்தது 6 பெட்டிகளிலேனும்** இலக்கமிடவும்.

## ‘அல்லது’

**கோட்டிற்குக் கீழே வாக்களித்தல்**

**குறைந்தது 12 பெட்டிகளிலேனும்** உங்கள் தெரிவின் ஒழுங்கு வரிசைப்படி ஒவ்வொரு வேட்பாளருக்கும் நீங்கள் இலக்கமிட வேண்டும்.

**சரியாக வாக்களிப்பது எவ்வாறு என்பதைப் பற்றி இங்கே பார்த்துத் தெரிந்துகொள்ளுங்கள்: aec.gov.au/translated**

**ஆஸ்திரேலியாவின் கட்டமைப்பிற்கு உங்கள் வாக்கு உதவும்.**

மேலும் அறிய
**aec.gov.au/translated 1300 720 153**

AEC Australian Electoral Commission

10 மோர்ட் தெரு, கான்பெரா -விலுள்ள தேர்தல் ஆணையாளரால் அங்கீகரிக்கப்பட்டது
Authorised by the Electoral Commissioner, 10 Mort Street, Canberra.


தாயக கலாசார
ஆபரணங்கள்
மெல்பேர்ணில்...
லக்கி
நகைத் தொழிலகம்
LUCKY JEWELLERY
பொன்னுருக்குதல்
தாலி செய்தல்
கல்யாண மோதிரம்
காது குத்துதல்
தமிழ் எழுத்துகளில் ஆபரணங்கள்
திருத்த வேலைகள் உடனடியாக
14/38 Mccrae Street, Dandenong VIC3175
luckysankaran@gmail.com
LuckyJewelleryMelborne
0387121974, 0415233284

# சிறுவர் இலக்கியத்தில் சித்திரக் கதைகள்: சிறார் மனதைக் கவர்ந்த முத்து காமிக்ஸ்!



**சிறுவர் இலக்கியத்தில் என்றென்றும் நிலைத்து நிற்கும் முத்து காமிக்ஸ் படைப்புகளை தமிழில் உருவாக்கிய சிவகாசியைச் சேர்ந்த திரு. சௌந்தரபாண்டியன் அண்மையில் (27.03.2025 )காலமானார். அவரின் நினைவாக இந்த ஆக்கம் பிரசுரமாகிறது**

**● ஐங்கரன் விக்கினேஸ்வரா**

நாங்கள் சிறுவர்களாக இருந்த போது சுவராசியமாக விரும்பிப் படிக்கும் சித்திரக்கதை புத்தகங்களில் முத்து காமிக்ஸ் முக்கியமான இடத்தை பிடித் திருந்தது. அந்தக் கதைகளில் அனைவருக்கும் பிடித்த துப்பறியும் வீரர் இரும்புக்கை மாயாவியின் கதைகள் இன்னமும் பலருக்கும் நினைவில் இருக்கும்.

முத்து காமிக்ஸ் கதாநாயகர்கள் என்றென்றும் நிலைத்து நிற்கும் நினைவுகளில் வாழ்ந்து கொண்டிருப்பார்கள். இந்த முத்து காமிக்ஸ் படைப்புகளை தமிழில் உருவாக்கிய திரு. சிவகாசி சௌந்தரபாண்டியன் அண்மையில் 27.3.2025 அன்று காலமானார்.


பல கதாநாயகர்களை கற்பனையால் உருவாக்கி எங்களது இளமைப் பருவத்தில் எங்களுக்கு சினிமா வாய்ப்பில்லாத போது பொழுதுபோக்கை உருவாக்கித் தந்த பெருமை மறைந்த சௌந்தரபாண்டியன் அவர்களுக்கு உரித்தாகும்.

எழுபதுகளில் பள்ளிப்பருவத்தில் முத்து காமிக்ஸ் புத்தகங்களுக்கு அடிமையான சிறுவர்களே அதிகம் எனலாம். அத்துடன் தமிழ் வாசிப்பும், எழுத்தும் நல்லபடியாக முன்னேற்ற அமைந்ததில் முத்து காமிக்ஸ் மற்றும் அதன் துணை நிறுவனங்களுக்கு பெரும் பங்கு உள்ளதெனில் மிகையல்ல.

சிறுவயதில் வாசிப்புத் திறனை மேம்படுத்திய நூல்கள் பல. குறிப்பாக இரும்புக்கை மாயாவி, மாயாஜால மன்னன் மான் ரக், காட்டுலக வேதாள மாயாவி, துப்பறியும் ரிப் கர்வி போன்ற கற்பனை கதாபாத்திரங்கள் சிறுவர்களுக்குள் ஊடுருவி இன்றளவும் பசுமையாக இருக்கும் சித்திரக் கதை காமிக்ஸ் கதாபாத்திரங்கள் சிலவாகும்.

**முத்து காமிக்ஸ் பதிப்பகம்:**

தமிழ் நாட்டில் முத்து காமிக்ஸ், பிரகாஷ் பதிப்பகத்தாரால் பதிப்பித்து வெளிவந்த ஒரு சித்திரக் கதை இதழாகும். சிவகாசியில் சௌந்தரபாண்டியன் என்பவரால் ஆரம்பிக் கப்பட்ட முத்து காமிக்ஸ் புத்தகங்கள் தொடர்ந்தும் அவரது



மகன் எஸ்.விஜயனினால் கொண்டு நடத்தப்பட்டது.

நீண்ட காலமாக பல்வேறு வகையான தமிழ் வரைகதைப் புத்தகங்களும் வெளிவருவது நின்றபின்னாலும் முத்து காமிக்ஸ் நீண்டகாலமாக வெளிவந்தமை குறிப்பிடப்பட வேண்டியதாகும்.

லயன் காமிக்ஸ், திகில் காமிக்ஸ், மினி லயன் காமிக்ஸ், ஜூனியர் லயன் ஆகிய சித்திரக்கதை இதழ்களையும் பிரகாஷ் பதிப்பகத்தாரே பதிப்பித்து வெளியிட்டனர்



என்பதும் குறிப்பிடத்தக்கது.

முத்து காமிக்ஸ் முதலில் 1972ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வெளியிடப்பட்டது. முத்து காமிக்ஸின் முதலாவது புத்தகம் இரும்புக்கை மாயாவி எனும் தலைப்பில் வெளிவந்தது. 128 பக்கங்களை கொண்டிருந்த அந்த முதல் புத்தகம் இந்திய 0.90 பைசாவிற்கு விற்கப்பட்டது. இதன் பின்னர் சௌந்தரபாண்டியனின் மகனான விஜயன் என்பவர் தந்தையைப் போலவே தானும் லயன் காமிக்ஸ் எனும் புதிய சித்திரக்கதை இதழை 1984 இல் வெளியிட்டார். லயன் காமிக்ஸின் முதல் இதழ் மாடஸ்டி பிளைசி எனப்படும் பிரிட்டிஷ் காமிக்ஸ் கதாநாயகியைக் கொண்டு "கத்தி முனையில் மாடஸ்டி" எனும் தலைப்பில் 2.00 ரூபா விலையில் வெளிவந்தது.

லயன் காமிக்ஸ் தொடங்கிய சமயத்தில் அதன் பதிப்பு ஆசிரியர் விஜயனின் வயது 17 மட்டுமே. ஆனாலும் லயன் காமிக்ஸை வெற்றிகரமாக நடத்திய விஜயன் பின்னர் முத்து காமிக்ஸையும் தனது பொறுப்பில் ஏற்றுக் கொண்டார். தொடர்ந்து திகில், மினி லயன் போன்ற காமிக்ஸ் இதழ் களையும் தொடங்கி வெற்றிகரமாக நடத்தினார் விஜயன்.

**பாடத்திட்டத்தில் சேர்க்க கோரிக்கை:**

எந்த வித விஷத்தையும் குழந்தைகள் மனதில் விதைக் காத அருமையான வரைகதைப் புத்தகங்களே இந்த காமிக்ஸ் புத்தகங்கள் ஆகும். தமிழ் கற்க குழந்தைகளுக்கு இதுதான் சிறந்த நூல் என்றும் சொல்லலாம். தமிழ்ப் பாடத் திட்டத்தில் ஒரு அம்சமாக சேர்க்கப்பட வேண்டிய புத்தகங்கள் முத்து காமிக்ஸ் எனவும் தமிழ் நாட்டில் ஓர் கோரிக்கை எழுந்தது.

இரும்புக்கை மாயாவி, ரிப் கெர்பி மாயாஜால மான்ரொக் என எத்தனை எத்தனையோ பாத்திரங்கள் படைக்கப்பட்டன. பால்ய வயதிலே சித்திரக் கதைகள் மூலம் அந்தக் காலங்களில் சிறுவர்களின் வாசிப்பு ஆர்வத்துக்கு தீனி போட்டவை இந்த நூல்கள் எனலாம்.

அதேவேளை அந்த நேரத்தில் பொன்னி காமிக்ஸ் போன்ற பெயர்களிலே வேறு பல காமிக்ஸ் நூல்களும் வெளிவந்தன.ஆனால் முத்து காமிக்ஸ் வெளியீடுகளில இருந்த சித்திரங்களின் நேர்த்தி, மொழிபெயர்ப்பின் தரம் வேறு எந்த வெளியீடுகளிலும் இருக்கவில்லை என்பதால் சிறுவர்களின் விருப்பத்திற்குரியதாக முத்து காமிக்ஸ் புகழ் பெற்றது.

**தினத்தந்தியின் ராணி காமிக்ஸ்:**

1984 காலப்பகுதியில் லயன் காமிக்ஸுக்குப் போட்டியாக ராணி காமிக்ஸ் தமிழில் அறிமுகம் ஆகியது. ராணி காமிக்ஸை தினத்தந்தி நிறுவனத்தார் பதிப்பித்தனர்.

ஆயினும் 2005 ஆம் ஆண்டளவில் வாசிப்பு பெருமளவில் நலிவடைந்து ராணி காமிக்ஸ் வெளியீடு நிறுத்தப்பட்டது.

குறிப்பாக 2000 ஆண்டின் தொடக்கத்தில் கேபிள் டிவி, இண்டர்நெட், வீடியோ கேம்ஸ், சினிமாக்களின் வருகையின் தாக்கம் காரணமாக வாசிப்பு பழக்கம் குறைந்து போனது எனவும் கணிக்கப்படுகிறது.

வாசகர்கள் குறைவு காரணமாக கோகுலம், ரத்னபாலா, பூந்தளிர், பாலமித்ரா, மேத்தா காமிக்ஸ், அசோக் காமிக்ஸ் போன்ற தமிழ் சிறுவர் மாத இதழ்கள் அனைத்தும் ஒரு காலகட்டத்தில் நின்று போயின.

அம்புலிமாமா எனும் சிறுவர் இதழ் 2013 ஆம் ஆண்டுவரை இயங்கி வந்து நின்று போனது. எனினும் லயன் காமிக்ஸும்,முத்து காமிக்ஸும் இன்றளவும் தொடர்ந்து பதிப்பிக்கப்பட்டு வருகின்றன.

தற்போது பெருமளவில் வாசிப்பு குறைந்து போனதால் லயன் காமிக்ஸ் முன்பு போல கடைகளில் பெரும்பாலும் விற்கப்படுவதில்லை. ஆண்டு சந்தா வழியாகவும், புத்தகக் கண்காட்சி விழாக்களிலும் மட்டுமே லயன், முத்து காமிக்ஸ் என்பன விற்கப்படுகின்றன.

**முத்து காமிக்ஸ் நாயகர்கள் :**

முத்து காமிக்ஸ், ராணி காமிக்ஸ், பூந்தளிர், அம்புலிமாமா போன்ற இதழ்கள் ஒவ்வொரு குழந்தையை நல்லவனாக கதாநாயகனாக மாற்ற அடித்தளம் அமைத்தன. 1970களில் குழந்தைகளின் முதல் பொழுதுபோக்குத் தேர்வு முத்து காமிக்ஸ் எனலாம்.

இரும்புக்கை மாயாவி, லாரன்ஸ் டேவிட் , மான் ரொக், லோதார், குதிரை வீரன் கிஸ்கோ கிட், போன்ற பல மனதில் நிறைந்த கதாபாத்திரங்கள் இன்றும் சிறுவர் மனதில் நிறைந்திருக்கும் . வேறு ஊடக வசதிகள் இல்லாத காலத்தில் இந்த கதை நூல்களே இளம் வாசகர்களை மகிழ்வித்த காலமாகும்.

இத்தகைய காமிக்ஸ் புத்தகங்களிலேயே முறையான, சிறப்பான படங்கள் வரையப்பட்டு இருக்கும். அதிலும் இரும்புக்கை மாயாவி கதைகள் மறக்க முடியாது. அந்தக் காலத்தில் குழந்தைகளுக்கென்ற தனி உலகைப் படைத்தது இந்த முத்து காமிக்ஸ்.

ஆனாலும் பெரும்பாலான காமிக்ஸ் கதைகள் அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளில் வெளிவந்த கதைகளில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டவை. பிரிட்டிஷ் சிறுவர் இதழான ப்ளீட்வே பதிப்பகத்தின் பிரதம நாயகர்கள் முத்து காமிக்ஸ ில் முக்கியமான நாயகர்களாக வலம் வந்தனர். இரும்புக்கை மாயாவி, ஜானி நீரோ, C.I.D. லாரன்ஸ் ரூ டேவிட், வேதாளர், ரிப் கிர்பி, சார்லி, மாண்ட் ரொக், பிலிப் காரிகன், போன்ற மிகவும் பிரபலமான ஆங்கில காமிக்ஸ் பாத்திரங்கள் முத்து காமிக்ஸில் தொடர்ந்து வந்தனர்.

பின்னாளில் பெல்ஜியத்தின் மிகப் பிரபலமான கேப்டன் டைகர், லார்கோ வின்ச், தோர்கல், ரிப்போர்டர் ஜானி, ப்ளூகோட் பட்டாளம், சிக் பில் ஆகிய நாயகர்களும் முத்துவில் தொடர்ந்து வந்தனர், இத்தாலியின் போனெல்லி பதிப்பகத்தின் டிடெக்டிவ் ராபின், மர்ம மனிதன் மார்டின் போன்ற நாயகர்களும் முத்து காமிக்ஸில் இடம் பெற்றனர்.

**வாழ்ந்த காலம் மீண்டும் வருமா?**

முத்து காமிக்ஸ் 1970களில் இன்றைய ஸ்மார்ட் போன் போல அந்த காலகட்டங்களில் சிறுவர்களின் கரங்களில் தவழ்ந்தன. குறிப்பாக இரும்புக்கை மாயாவியை எடுத்தால் படித்து முடித்த பின்னரே கீழே வைக்கமுடியும். அந்தளவுக்கு விறுவிறுப்பான கதையம்சத்தோடும், படங்களோடும் இருக்கும்.

1970களில் சிறுவர்களாக இருந்த யாரும் முத்து காமிக்ஸ் படிக்காமல் இருந்திருக்க முடியாது. தொலைக்காட்சி இல்லாத நாட்களில் முத்து காமிக்ஸ் ஒரு பெரிய வரப்பிரசாத மாகும். அத்துடன் முத்து காமிக்ஸ், அம்புலிமாமா போன்ற புத்தகங்களை படித்த காலம் பொற்காலமாகும்.


CEYLON EXPRESS
MONEY TRANSFER
❖ Best Rates Guarantee
❖ Same Day Bank Transfer
❖ Responsible Customer Support
❖ Easy, Quick Internet Money Transfer
127, Walker st, Dandenong
CONTACT : OSMAN 0402 396 052


PAINTING SERVICES
INTERIOR AND EXTERIOR
TIMBER FLOORING
supply and installation
DECKING
BUDGET FRIENDLY HOME IMPROVEMENTS
Contact : 040 0287 198





# கத்தரித்தோட்டத்து வெருளிகளா?

● ஆர்.சுகந்தன்

இலங்கையில் கடந்த நாடாளுமன்றத் தேர்தல் தமிழ் தேசிய கட்சிகளுக்குப் பெரும் பின்னடைவை ஏற்படுத்தியது. தமிழ்த் தேசியக் கட்சிகளிடையே ஏற்பட்டிருந்த பிளவுகள், விமர்சனங்கள், உள்வீட்டு சண்டைகள் காரணமாக அந்தக்கட்சிகள் தொடர்பில் மக்கள் பெரும் அதிருப்தியுற்றிருந்தனர். எனவே இந்தக் கட்சிகளைத் திருத்துவதற்கு அல்லது வழிக்கு கொண்டுவருவதற்கு மாற்றான ஒரு தெரிவை நோக்கி வடக்கு வாழ் தமிழ் வாக்காளர்கள் உந்தப்பட்டனர். அதற்குரிய தெரிவாக தமிழ் வாக்காளர்களின் முன்னால் இருந்தது தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர்கள்தான். தெற்கில் அனுர குமார திஸநாயக்க குறித்து உருவாகியிருந்த அதிதீவிரக் கவர்ச்சியும், அவர் பரப்புரை மேடைகளில் பேசிய ஊழல் எதிர்ப்பும் பெரியளவில் மக்களை ஈர்த்திருந்தது. அந்த ஈர்ப்பானது மிக விரைவாகவே அதிருப்தியடைந்திருந்த தமிழ் வாக்காளர்களையும் தொற்றிக்கொண்டது. இதன் விளைவாக அனுரகுமார திஸநாயக்கவின் சின்னத்தை மக்கள் தேடித்தேடி வாக்களித்தனர். இங்கே வேட்பாளர்களை, அவர்தம் தகுதிகளை மக்கள் கவனத்திலெடுக்கவில்லை. முழுக்க முழுக்க திசைகாட்டிச் சின்னத்திற்கும், தாம் விரும்பிய இலக்கத்திற்குமே குத்தினர். எனவேதான் தேசிய மக்கள் சக்தி சார்பில் வட மாகாணத்தில் ஐந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டனர். இவர்களில் இருவரைத்தவிர ஏனையவர்கள் கடந்த காலங்களில் எந்தவிதத் தேர்தல்களிலும் போட்டியிட்டவர்களும் கிடையாது. மக்களிடம் அறிமுகமானவர்களும் கிடையாது.

இப்படியாக சின்னத்தைப் பார்த்து வாக்களித்தமை தாம் விட்ட மிகப்பெரிய தவறு என இப்போது வடக்கு வாழ் தமிழ் மக்கள் புலம்பத்தொடங்கியிருக்கின்றனர்.

தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்றம் உருவாகி ஆறு மாதம் நெருங்கிக்கொண்டிருக்கின்றது. இந்த ஆறு மாத காலத்தில் வடமாகாணத்திலிருந்து தெரிவுசெய்யப்பட்ட தேசிய மக்கள் சக்தியின் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஒருவர்தானும் நாடாளுமன்றத்துக்குள் காத்திரமான உரையை நிகழ்த்தவில்லை. வரவு - செலவுத் திட்ட விவாத்தின்போது கூட வாயே திறக்காமல் இருந்துவிட்டனர். அத்தோடு வடக்கில் மக்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகள் தொடர்பாகவோ, ஊழல்கள் தொடர்பாகவோ எதுவிதமான நடவடிக்கைகளையும் அவர்களால் மேற்கொள்ள முடியவில்லை. இந்த ஆறு மாத காலத்திற்குள் இந்த ஐந்து நாடாளுமன்ற உறுப்பினர்களும், ஜனாதிபதி அனுரகுமார திஸநாயக்காவினை வரவேற்றது, பிரதமர் ஹரிணி அமரசூரியவை வரவேற்றது, அமைச்சர்களான விஜித ஹேரத் மற்றும் பிமல் ரத்நாயக்காவை வரவேற்றமை ஆகிய நிகழ்ச்சிகளைத் தவிர வேறொன்றையும் செய்யவில்லை.

வழமையாக தெற்கில் ஆட்சியமைக்கும் அரசு சார்பில் வட மாகாணத்தை மையப்படுத்தித் தெரிவாகும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அரசு முக்கியமான அமைச்சுப் பதவியையோ அல்லது பிரதி அமைச்சர் பதவியையோ அல்லது இராஜாங்க அமைச்சுப் பதவியையோ வழங்கும். ஆனால் தேசிய மக்கள் சக்தி அரசானது வடக்கிலிருந்து தெரிவான ஐந்து தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் எவ்வித அமைச்சுப் பதவிகளையும் வழங்கவில்லை. இது குறித்து கேள்வியெழுப்பப்பட்டபோது, தாம் இனவாத அடிப்படையில் அமைச்சுப் பொறுப்புகளை வழங்கவில்லை என ஜனாதிபதி சொல்லிவிட்டார். ஆனால் அதே ஜனாதிபதி நேற்றுமுன்தினம் மட்டக்களப்பில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போது, அம்பாறை மாவட்டத்திற்கு கிடைத்த ஒரேயொரு தேசியப்பட்டியல் ஆசனத்தை முஸ்லிம் மக்களைப் பிரதிநிதித்துவம் செய்கிற முஸ்லிம் ஒருவருக்கு வழங்கியதாகக் கூறுகிறார். எனவே வடக்கு மாகாணத்திலிருந்து தெரிவுசெய்யப்பட்ட இந்த ஐவரும் திட்டமிடப்பட்ட ரீதியில் அமைச்சுப் பொறுப்புகளுக்குள் உள்வாங்கப்படாமல் புறக்கணிக்கப்பட்டிருக்கின்றனர்.

இந்த ஐவரையும் தாண்டி தேசிய மக்கள் சக்தி சார்பில் வடமாகாணத்திலிருந்து இருவருக்குத் தேசியப்பட்டியல் ஆசனம் வழங்கப்பட்டது. அதில் ஒருவர், வட மாகாணத்தில் நீண்டகாலம் தங்கியிருந்து தேசிய மக்கள் சக்தியின் அரசியலைச் செய்துவரும், இராமலிங்கம் சந்திரசேகர், மற்றையவர் வவுனியா வடக்கில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை முன்னின்று நடத்தியவரும், அங்கு குடியிருப்பவருமாகிய உபாலி சமரசிங்க. இருவருமே தேர்தலில் போட்டியிடாதவர்கள். மக்களால் தெரிவு செய்யப்படாதவர்கள். ஆனால் இவர்களில் இராமலிங்கம் சந்திரசேகருக்கு கடற்றொழில் அமைச்சுப் பதவி வழங்கப்பட்டுள்ளது. அதேபோல உபாலி சமரசிங்கவிற்கும் பிரதியமைச்சர் பதவி வழங்கப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக, இராமலிங்கம் சந்திரசேகருக்கு யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு தலைவர் பதவியும், உபாலி சமரசிங்கவிற்கு வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களின் ஒருங்கிணைப்புக் குழு தலைவர் பதவியும் வழங்கப்பட்டுள்ளன. வடக்கிலிருந்து மக்களால் தெரிவுசெய்யப்பட்ட ஐந்து தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தை வழிநடத்தும் பொறுப்பு மாத்திரமே வழங்கப்பட்டுள்ளது. இத்தனைக்கும் இந்த ஐந்து நாடாளுமன்ற உறுப்பினர்களுமே அரசியல்வாதிகளாவதற்கு முன்பு வரை உயர்ந்த அரச பதவிகளை வகித்தவர்கள். குறைந்தபட்சம் ஒரு பல்கலைக்கழக பட்டத்தையாவது கொண்டிருப்பவர்கள். இவர்களுக்கு பொறுப்பான எந்தப் பதவிகளும் வழங்காது அரசு தட்டிக்கழித்திருக்கிறது. இதனைக்கூடப் பொதுவெளியில் பேசமுடியாதவர்களாக, அதிகாரத்திற்கு பயந்து ஏவல்செய்பவர்களாக இந்த ஐவரும் தற்போதிருக்கின்றனர்.

இந்த ஐவருமே, தமக்கு கிடைத்த பிரதேச ஒருங்கிணைப்புக்குழு கூட்டங்களை நடத்தும் பொறுப்பையாவது சரியாக செய்கிறார்களா எனப் பார்த்தால், அதுவும் சந்திசிரிக்கும் நிலையில்தான் இருக்கின்றது. உள்ளூராட்சித் தேர்தலை முன்னிட்டு, தேசிய மக்கள் சக்தி வடக்கில் அவசரஅவசரமாக ஒருங்கிணைப்புக் குழு கூட்டங்களை நடத்தியது. அதில் பிரதேச சபை மட்டத்திலான கூட்டங்களுக்குத் தலைமைதாங்கிய குறித்த நாடாளுமன்ற உறுப்பினர்கள், சக நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதனைக்கூட கட்டுப்படுத்த முடியாத கையறுநிலையில்தான் இருந்தனர். இந்த இடங்களில் கூட்டத்தில் கலந்துகொண்ட பொதுமக்கள் நேரடியாகவே குறித்த நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் விமர்சனங்களை முன்வைத்தனர். இந்தளவிற்கு ஒரு பொதுக்கூட்டத்தைக்கூட வழிப்படுத்த முடியாத ஆளுமை குறைபாடுள்ளவர்களாக வட மாகாணத்தைப் பிரதிநிதித்துவம் செய்கிற தேசிய மக்கள் சக்தியின் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருக்கின்றனர்.

அதேபோல குறித்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் மக்களை சந்திக்கும்போதும், பொது நிகழ்வுகளில் கலந்துகொள்ளுகின்றபோதும், ஊடகவியலாளர் சந்திப்புகளின் போதும், நேர்காணல்களின்போதும் மிகுந்த தரக்குறைவான வார்த்தைப் பிரயோகங்களை மேற்கொள்கின்றனர். இவர்களுக்கு வாக்களிக்கின்றவர்களே முகம் சுழிக்கின்ற அளவிற்கு நடந்துகொள்கின்றனர். சிறுபிள்ளைத்தனமான இவர்களின் செயற்பாடுகளே, மக்களை, தாம் பிழையானவர்களைத் தெரிவுசெய்துவிட்டோம் என எண்ணவைத்துள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து தேசியப் பட்டியல் ஊடாகத் தெரிவுசெய்யப்பட்ட இராமலிங்கம் சந்திரசேகர் அவர்களுக்கு கடற்றொழில் அமைச்சுப் பதவி வழங்கப்பட்டது. ஆனால் அவர் இதுவரைக்கும் யாழ்ப்பாணத்தை தாண்டி வேறெங்கேயும் சென்று மீனவர்களின் பிரச்சினைகளை ஆராயவில்லை. இலங்கையின் மொத்த கடற்றொழில் துறைகளும், மீனவர்களும் யாழ்ப்பாணத்திலும், முல்லைத் தீவிலும் மாத்திரமே இருக்கின்றது என நினைத்துக்கொண்டு செயற்படுகிறார். இப்படி வடமாகாணத்திலேயே அவர் தங்கியிருக்கின்றபோதிலும், வடமாகாண மீனவர்களின் பிரச்சினைகளைக்கூடத் தீர்க்கவில்லை. தமிழக - வட மாகாண மீனவர்களிடையே முரண்பாடுகளை உண்டாக்கும் விதத்தில் அறிக்கைகளை விட்டுக்கொண்டு, தேர்தல் பரப்புரை நடவடிக்கைகளைக் கவனிக்கும் ஒருவராகவே கடற்றொழில் அமைச்சர் செயற்பட்டுக்கொண்டிருக்கிறார்.

ஆகவே வடக்கு மக்களால் தேசிய மக்கள் சக்தி சார்பில் தெரிவுசெய்யப்பட்டு நாடாளுமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ள ஐந்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் இப்படித்தான் இருக்கின்றனர். இந்தப் பேசாமடந்தைகளையே மக்கள் தெரிவுசெய்திருக்கின்றனர். தேசிய மக்கள் சக்தி அரசிற்கும் இவர்களைப் போன்ற பேசாமடந்தைகளே தேவையாகவுள்ளனர். தாம் சொல்வதை மட்டும் செய்யக் கூடியவர்கள் கிடைத்தால் போதுமெனவே தேசிய மக்கள் சக்தி கருதுகின்றது. இந்த இடத்தில்தான் நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதன் ,இவர்கள் குறித்து விழித்த “கத்தரித்தோட்டத்து வெருளிகள்”

என்கிற பதம் பொருத்தமானதாக அமைகின்றது. ஆனால் கத்தரித்தோட்டத்து வெருளி காவலாவது செய்யும். இவர்கள்............?

# அகம், புறம், சங்க(ம)ம்

## சீறியாழ் பணையம்!

சித்திரை மாதம் வந்துவிட்டாலே எனக்குத் திடீர்க் கலக்கம் வந்துவிடும். ஏனென்றால் அப்பொழுது தான் இங்கு எத்துணை தமிழ் அமைப்புகள் இயங்குகின்றன என்பது நமக்குத் தெரியும். எல்லா அமைப்புகளும் சித்திரைத் திருநாள் அல்லது தமிழர் திருவிழாக்களைக் கொண்டாடத் தொடங்கிவிடுவார்கள் தானே. அவற்றையெல்லாம் தவறு என்று சொல்ல மாட்டேன். காலம் காலமாக மக்களை ஒன்றிணைக்க இவ்வாறான திருவிழாக்கள் தேவைதான். ஆனால் இந்த விழாக்கள் எமது கலாசாரத்தினை பறை சாற்றுகின்றனவனா என்றால் இல்லை என்று தான் சொல்ல முடியும்.

கடந்த மாதம் எழுத்தாளர் பேராசிரியர். ஆசி கந்தராஜாவின் பவள விழாவில் வாசகனாகப் பேசும் வாய்ப்பு கிடைத்தது. அந்த உரைக்காக பேராசிரியரின் புத்தகங்களை மறுவாசிப்புச் செய்யும்போது அவரது குறிப்பிடத்தக்க 'தலவிருட்சம்' எனும் பனைமரம் கட்டுரையை படித்தேன். அதில் பனைமரம் எவ்வாறு பண்டைய தமிழரின் வாழ்வில் இன்றியமையாத அம்சமாக இருந்தது எனும் வரலாற்றுச் செய்தியினை அறியும் வாய்ப்பு கிட்டியது.அதாவது "சித்திரை வருஷப் பிறப்பன்று வைரவருக்கு பொங்கல் பொங்கி, அத்துடன் முக்கனிகளாகச் சொல்லப்படும் மா, வாழை, பலாப் பழங்களுடன் 'மடை'வைப்போம் அல்லவா . 'முக்கனிகளைப் பற்றிய புனிதம் சைவசமய பூசை அநுட்டானங்களிலே வலியுறுத்தப்படுவது எல்லாம் பிற்காலத்திலே தோன்றியதாகும். ஒவ்வொரு கோயிலுக்கும் ஒவ்வொரு விருட்சம் சிறப்பாகச் சொல்லப்படுகிறது. ஆதிகாலத்தில் யாழ்ப்பாணக் கோவில்களுக்கு தல விருட்சமாக அமைந்தது, யாழ் கலாசாரத்துடன் கைகோர்த்துச் செழித்து வளர்ந்த பனை மரமே" அதுமட்டுமின்றி பனையும் அதன் பானமும் அவற்றை உண்டு தமிழிலே களிப்புற்ற பாணருமே நமது தமிழ்க் கலை இலக்கிய வடிவங்களுக்கு முதன் முதலாக வடிவமும், வகையும், சுவையும் அளித்தனர். எனவே சங்க காலத்திலே தமிழின் படைப்புக்கும் சுவைக்கும் ஊடக பானமாக விளங்கிய கள் மதுவகையிலே சேர்க்கப்படாமல் உணவு வகைகளிலே சேர்க்கப்பட்டதாக மூத்த எழுத்தாளர் எஸ்பொ, ஆசியுடன் சொல்லியிருக்கிறார். அப்போது நடைபெற்ற உரையாடலில் சங்கத் தமிழிலே கள்ளின் புகழ்பாடும் பாடலான 'சீறியாழ் பணையம்' என்ற தலைப்பில், மதுரைக் கள்ளிற் கடையத்தன் வெண்ணாகனார் என்பவர் இயற்றிய சங்கத் தமிழ்ப் பாடலையும் எடுத்து சொல்லியிருக்கிறார் .

புறநானூறு, 316. (சீறியாழ் பணையம்!)

கள்ளின் வாழ்த்திக் கள்ளின் வாழ்த்திக்
காட்டொடு மிடைந்த சீயா முன்றில்
நாட்செருக்கு அனந்தர்த் துஞ்சு வோனே!
அவன்எம் இறைவன் யாம்அவன் பாணர்
நெருநை வந்த விருந்திற்கு மற்றுத்தன்
இரும்புடைப் பழவாள் வைத்தனன் இன்றுஇக்
கருங்கோட்டுச் சீறியாழ் பணையம் இதுகொண்டு
ஈவது இலாளன் என்னாது நீயும்
வள்ளி மருங்குல் வயங்குஇழை அணியக்
கள்ளுடைக் கலத்தேம் யாம்மகிழ் தூங்கச்
சென்றுவாய் சிவந்துமேல் வருக
சிறுகண் யானை வேந்து விழுமுறவே.

பாடியவர்: மதுரைக் கள்ளிற் கடையத்தன் வெண்ணாகனார். இவர் இயற்பெயர் வெண்ணாகனார்.

பாடப்பட்டோன்: யாருமில்லை.

திணை: வாகை. வாகைப் பூவைத் தலையில் சூடிப் பகைவரை வென்று ஆரவாரித்தல்.

துறை: வல்லாண் முல்லை. ஒருவீரனுடைய வீட்டையும், ஊரையும், இயல்பினையும் சொல்லி அவனுடைய புகழ்மிக்க ஆண்மைத் தன்மையைப் பாராட்டுதல்.



ஆனந்தன் வசந்தா கிருஷ்ணமூர்த்தி

பாடலின் பின்னணி: முன்பொரு காலத்தில் ஓரூரில் ஆட்சி புரிந்த அரசன் மற்றொரு அரசனுடன் போரிட்டான். போரில் பகைவனான அரசன் இறந்தான். வெற்றி பெற்ற அரசன்விடியற்காலைவரை கள்ளுண்டு மயங்கிக் கிடந்தான். அவனிடம் பரிசில் பெற்றுவரும் பாணர்களின் தலைவன், அவன் வரும்வழியில் வேறு சில பாணர்களைக் கண்டான். அப்பாணர் தலைவன் வழியில் வந்த பாணர்களைக் கள்ளுண்டு மயங்கிக் கிடக்கும் அரசனிடம் ஆற்றுப்படுத்துவதாக இப்பாடல் அமைந்துள்ளது.

அருஞ்சொற்பொருள்:-


காட்டு = செத்தை, சருகு; மிடைதல் = செறிதல், கலத்தல்; சீத்தல் = தூய்மை ஆக்குதல் சீயா = தூய்மை செய்யப்படாத; முன்றில் = முற்றம் செருக்கு = மயக்கம் அனந்தர் = மயங்கிய நிலை துஞ்சுதல் = தூங்குதல்; நெருநை = நெருநல் = நேற்று; இரு = பெரிய; புடை = பக்கம் பணையம் = பந்தயப் பொருள் (பணயம்) வள்ளி = ஒரு வகையான கொடி; மருங்குல் = இடை; வயங்கல் = ஒளி செய்தல்; இழை = அணிகலன் விழுமுறுதல் = துன்புறுதல்.

விளக்கம் :-

சிறிய கண்களையுடைய யானையுடன் பகைவேந்தன் என் மன்னனை எதிர்த்து போராடி இறந்தான். அவனை வீழ்த்திய மகிழ்ச்சியில் என் மன்னன் கள்ளை உண்டு, செத்தைகள் நிறைந்த, தூய்மை செய்யப்படாத இந்த முற்றத்தில் விடியற் காலத்திலிருந்து உண்ட கள்ளின் மயக்கத்தால் உறங்குகின்றானே அவன் எம் இறைவன் (அரசன்). நாங்கள் அவனுடைய பாணர்கள். நேற்று தன்னிடம் வந்த விருந்தினரை உபசரிப்பதற்காக தன் பெரிய பழமையான வாளை ஈடு வைத்தான். அவன் மேலுள்ள அன்பை மெய்ப்பிக்க நாங்களும் எங்களுடைய கரிய தண்டையுடைய சிறிய யாழைப் பணயமாகக் வைக்கின்றோம். அவன் ஒன்றும் இல்லாதவன் என்று எண்ணி நீயும் திரும்பி செல்லாமல் , கொடிபோன்ற இடையையுடைய உன் பாடினியோடு அவனிடம் சென்று, அவன் அளிக்கும் விளங்கும் அணிகலன்களை அணிந்து கொண்டு உங்கள் வாய் சிவக்குமாறு விருந்து உண்டு வருக. அப்படிச் செய்தால் கள் நிறைந்த கலங்களை கைகளில் ஏந்தியுள்ள நாங்கள் பெருமகிழ்ச்சி கொள்வோம்.

தமிழ்நாடு சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்ட மசோதாக்களுக்கு ஒப்புதல் வழங்காமல் கிடப்பில் போட்ட ஆளுநர் ரவிக்கு எதிராகத் தமிழ்நாடு அரசு தொடர்ந்த வழக்கில் உச்ச நீதிமன்றம் தனது தீர்ப்பை அறிவித்துள்ளது. உச்ச நீதிமன்றம் தனது உத்தரவில், தமிழக அரசின் 10 மசோதாக்களை நிறுத்தி வைத்தது சட்டவிரோதம் எனக் கூறியுள்ளது. தமிழகமெங்கும் கழகக் கண்மணிகள் தங்களது அரசன் ஆளுநருக்கு எதிரான போரில் வென்ற இந்த வேளையில் நாடெங்கும் கொண்டாடி மகிழ்ந்து வருகின்ற செய்திகளைப் பார்க்க முடிகிறது. சித்திரை திருநாளான தமிழர் திருநாளில் புறநானூற்றுப் பாடலில் வருவது போல தமிழக அரசு கள்ளினைத் தடை செய்துள்ளதால் கழக கண்மணிகளோடு, மக்களும் அரசே நடத்தும் தாராள மது விற்பனை டாஸ்மாக் கடைகளில் மதுவினை குடித்து இந்த வெற்றியினை கொண்டாடுவதை விட வேறு என்ன செய்வது?


புறநானூறு, 316. சீறியாழ் பணையம்!



பாடியவர்: மதுரைக் கள்ளிற் கடையத்தன் வெண்ணாகனார்.

மெல்பேர்னில் உங்கள் அபிமான வானொலி சேவை
சங்கநாதம்
3MDR 97.1FM
32 YEARS OF SERVICE
3MDR 97.1 fm mountain district radio
பிரதி ஞாயிறுதோறும் காலை 8 மணிமுதல் 10 மணிவரை கேட்டு மகிழலாம்
SANGANATHAM TAMIL COMMUNITY BROADCAST FM 97.1 ON SUNDAY 8AM TO 10AM
WEB www.sanganatham.net.au
sanganatham@gmail.com
vtca sanganatham

# சீனாவின் சிவப்பு எச்சரிக்கை!



சீனாவைத் தளமாகக்கொண்ட நிறுவனத்துக்குரிய டார்வின் துறைமுக குத்தகை ஒப்பந்தம் தொடர்பில் ஆஸ்திரேலியாவின் இரு பிரதான கட்சிகளையும் சீனா எச்சரித்துள்ளது.

தேர்தலில் தாம் வெற்றிபெற்றால் மேற்படி நிறுவனத்துடனான 99 வருடகால குத்தகை ஒப்பந்தம் இரத்துச் செய்யப்படும் என லேபர் மற்றும் லிபரல் கூட்டணிகள் உறுதியளித்துள்ளன. ஆஸ்திரேலியாவின் இந்த உறுதிமொழியை சீனா வன்மையாகக் கண்டித்துள்ளது.

பீஜிங் மற்றும் கன்பராவுக்கிடையிலான உறவு சீராகிவரும் சூழ்நிலையில், இந்தக் குத்தகை ஒப்பந்த இரத்து விவகாரமானது இரு நாட்டு உறவை மீண்டும் சீர்குலைக்கும் என சீன வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

"ஆஸ்திரேலியாவில் முதலீடு செய்யும் சீன நிறுவனங்களின் வணிகப் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும் என ஆஸ்திரேலிய தரப்பினரை நாம் வலியுறுத்துகின்றோம். மேலும் தேசிய பாதுகாப்பு என்ற விடயத்தை மிகைப்படுத்துவதையும், சாதாரண வணிக ஒத்துழைப்பை அரசியலாக்குவதையும் தவிர்க்க வேண்டும்' எனவும் சீன வலியுறுத்தியுள்ளது.

2015 லிபரல் கட்சி ஆட்சியின்போதே டார்வின் துறைமுகம் சீன நிறுவனத்துக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டது. எனினும், இது தவறான முடிவு என்பதை தற்போதைய லிபரல் கட்சி தலைவர் பீட்டர் டட்டன் ஒப்புகொண்டுள்ளார்.

## தாயைக் கொன்ற மகனுக்குச் சிறை



காப்புறுதியைப் பெறுவதற்காக தனது தாயைக்கொலை செய்த பேர்த்தை சேர்ந்த மகனுக்கு 25 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

29 வயதான ஆண்ட்ரே ரெபெலோ என்பவருக்கே மேற்கு ஆஸ்திரேலிய உச்ச நீதிமன்றத்தால் இந்தத்தண்டனை இன்று வழங்கப்பட்டுள்ளது.

2020 மே 20 ஆம் திகதி இந்தக்கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

58 வயதான தனது தாயைக் கொன்றுவிட்டு, அவர் இயற்கையாக மரணமடைந்துவிட்டாரென போலி ஆவணங்களை தயாரித்து காப்புறுதியைப் பெற முற்பட்டுள்ளார் மகன்.

இது தொடர்பான வழக்கு விசாரணையில் மகனே குற்றவாளியென நீதிமன்றம் கடந்த டிசம்பரில் கண்டறிந்த நிலையில், 25 ஆண்டுகால சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு, தீர்ப்பு அறிவிக்கப்பட்டது.

## கொலைக்களமாகும் NSW




நியூ சவூத் வேல்ஸ் மாநிலத்தில் கடந்த வருடம் மாத்திரம் 85 பேர் படுகொலை செய்யப்பட்டிருந்தனர்.

கடந்த 10 வருடங்களில் மாநிலத்தில் கடந்த வருடமே அதிகளவு கொலைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. 2014ஆம் ஆண்டில் 93 பேர் படுகொலை செய்யப்பட்டிருந்தனர்.

அதேபோல 2023 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் நியூ சவூத் வேல்ஸ் மாநிலத்தில் கொலைச் சம்பவங்களின் எண்ணிக்கை 46 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. 2023 ஆம் ஆண்டில் 58 பேர் கொல்லப்பட்டிருந்தனர்.

2024ஆம் ஆண்டில் கொலை செய்யப்பட்டவர்களில் 46 பேர் ஆண்கள் எனவும், 26 பேர் பெண்கள் எனவும் 13 பேர் இளையவர்கள் எனவும் தரவுகள் தெரிவிக்கின்றன.

கடந்த வருடம் இடம்பெற்ற கொலைகளில் 45.9 சதவீதமானவை குடும்ப வன்முறையால் இடம்பெற்ற கொலைகளாகும்.



# தேர்தல் தினமாகிய மே 3 சனிக்கிழமையன்று உங்களால் வாக்களிக்க முடியாதா?



18 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய சகல ஆஸ்திரேலியப் பிரசைகளும் வாக்களிக்க வேண்டுமென்று சட்டத்தால் வேண்டப்படுகின்றனர்.

தேர்தல் நாளில் உங்களால் வாக்குச் சாவடிக்குச் செல்ல முடியாவிட்டால், நீங்கள்:

- **ஒரு முன்கூட்டிய வாக்களிப்பு நிலையத்தில் முன்கூட்டியே வாக்களிக்கத் தகுதி பெறக்கூடும், அல்லது**
- **தபால் மூலம் வக்களிப்பதற்காக விண்ணப்பிக்கத் தகுதி பெறக்கூடும்.**




முன்கூட்டியே வாக்களிக்கும் விருப்பத் தெரிவுகளையும், அதற்கான தகுதியையும் அறிய, **aec.gov.au/early** - இற்குச் செல்லவும்.

தற்சமயம், உத்தியோகபூர்வ வழிகாட்டி தபால் மூலம் உங்களை வந்தடைந்திருக்க வேண்டும். உங்கள் வாக்கு கவனத்தில் கொள்ளப்படத் தேவையான அனைத்து தகவல்களும் இதில் உள்ளன.

வழிகாட்டியைப் பதிவிறக்கம் செய்யக் கீழே உள்ள 'QR குறியீ'ட்டை 'ஸ்கேன்' செய்யுங்கள்.

**ஆஸ்திரேலியாவின் கட்டமைப்பிற்கு உங்கள் வாக்கு உதவும்.**

மேலும் அறிய
**aec.gov.au/translated**
**1300 720 153**

AEC Australian Electoral Commission

**10 மோர்ட் தெரு, கான்பெரா -விலுள்ள தேர்தல் ஆணையாளரால் அங்கீகரிக்கப்பட்டது**
**Authorised by the Electoral Commissioner, 10 Mort Street, Canberra.**


ATOP IMPORTS
FLOORING
Yes, We are
OPEN NOW
We Install & Supply All Types Of Flooring Products!
Solid Parquetry
Engineered Oak
Strip Flooring
Hybrid Flooring
Engineered Parquetry
Laminated Flooring
Tiles
Carpets
Herringbone Flooring
DON'T MISS OUT ON OUR GRAND OPENING
MEGA SALE
Cladding
0433071956
03 87535351
1/44 Princes Hwy, Eumemmerring VIC 3177
www.atopimports.au

Transco™
CARGO

=




# ஒவ்வொரு வாரமும் இலங்கைக்கு ஏற்றுமதி செய்யும் ஒரே நிறுவனம்

- ONLINE TRACKING
- SMS & EMAIL ARRIVAL NOTICE NOTIFICATION
- LIVE CHAT ON WEBSITE
- TRANSCO APP

*We love to deliver*

IF YOU MISS THE CUT-OFF THIS WEEK
YOU CAN SEND IT NEXT WEEK
IT'S AS EASY AS THAT

Weekly shipments exclusive to Transco warehouses in Dandenong South and Campbellfield

206-208 Discovery Road
**Dandenong South**
**(03) 9703 2255**

45 Adrian Rd
**Campbellfield**
**(03) 9357 7228**

SYDNEY - **02 9897 0004**
PERTH - **08 9452 7707**
BRISBANE - **07 3219 0203**
CANBERRA - **02 62821905**
TASMANIA - **03 90174167**
ADELAIDE - **08 8322 8825**
DARWIN - **08 79790002**

**1300 1 TRANSCO** (1300 187 267)

**WWW.TRANSCOCARGO.COM.AU**